விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 16 திங்கட்கிழமை (30.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கையை சீனாவும் கைவிட்டது

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சீனப் பயணம் தோல்வியில் முடிந்துள்ளதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதனால் இலங்கை அரசு அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் சீனப் பயணத்தின் போது கூட்டறிக்கை ஒன்றை வெளியிடுவதையும் ஐ.நாவின் அறிக்கை தொடர்பாக சீனாவிடம் இருந்து தெளிவான வாக்குறுதியைப் பெறுவதையும் நோக்கமாக கொண்டிருந்தது. எனினும் அவை இரண்டுமே சாத்தியமற்றுப் போயுள்ளன.

ஏற்கனவே புதுடில்லி சென்றிருந்த அமைச்சர் பீரிஸின் பயணம் பின்னடைவை சந்தித்திருந்தது. அதேவேளை அவர் இந்தியாவுக்குச் சென்றபோது வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் எவரையும் தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை.

இதனையடுத்து அமைச்சர் பீரிஸ் சீனாவுக்கும் பயணத்தை மேற்கொண்டிருந்தார். பீஜிங்கில் அதிகமாக வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் பேச்சுக்களின் பின்னர் கூட்டறிக்கையோ அல்லது அறிக்கையோ வெளியிடப்படவில்லை.

வெளிவிவகார அமைச்சின் சார்பில் அமைச்சர் பீரிஸ் கொழும்பில் அறிக்கையொன்றை வெளியிடப் பணித்திருந்தார்.

பீஜிங் சென்றபோது அவர் வெளிவிவகார அமைச்சின் அதிகாரியான சோபினி குணசேகரவை அழைத்துச் சென்றிருந்தார். இவர் முன்னர் பீஜிங்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் பணியாற்றியவர்.

சீனவெளிவிவகார அமைச்சர் யங் ஜீச்சியை சந்தித்த (20ஆம் பக்கம் பார்க்க)

## நாம் கட்டி எழுப்பும் சமாதானத்தை மேற்குலக சக்திகள் குழப்புகின்றன!



### யாழ். வந்த அமைச்சர் கஜிதீர குமுறல்

(யாழ்ப்பாணம்)

எம்மால் கட்டியெழுப்பப்படும் சமாதானத்தை மேற்குலக சக்திகள் குழப்பி வருகின்றன. அத்துடன் எமது பொருளாதாரத்தை சுரண்டுவதற்கும் மேற்குலக விஷமிகள் முயற்சிக்கின்றனர். இவ்வாறு புனர்வாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜிதீர தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

### ரணில் இந்தியா பயணம்

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று திங்கட்கிழமை காலை புதுடில்லி பயணமாகிறார்.

அவர் புதுடில்லியில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி உட்பட உயர்மட்டத்தலைவர்களையும் ஏனைய கட்சித்தலைவர்களையும் சந்தித்து பேசவிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலக வட்டாரம் தெரிவித்தது.

உள்நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களுடன் பேசவிருப்பதாகவும் அந்த வட்டாரம் தெரிவித்தது. (ந-5)

### சாட்டிக் கடலில் குளித்தவர் நீரில் மூழ்கி மரணம்

(குருநகர்)

வேலணை சாட்டிக் கடலில் குளிக்கக் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமானார். நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொழும்புத்துறையைச் சேர்ந்த குணரட்ணம் செல்வராசா (வயது 40) என்பவரே மரணமடைந்தவராவார்.

கடலில் இருந்து மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனையின் பொருட்டு வேலணை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-6,39)

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் எச்சரிக்கிறார் பிரதமர் மன்மோகன் சிங்

(டெல்லி)

வடக்குக் கிழக்கு மக்களுக்கு உடனடியாகத் தீர்வை முன்வைக்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் வடமாகாண உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை உடனடியாக நடத்துதல் போன்ற அழுத்தங்களும் அரசாங்கத்தின் மீது பிரயோகிக்கப்படுகின்றன.

இதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாதப் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக இலங்கைக்கான ஆதரவை இடை நிறுத்திக்கொள்ளப்போவதாக இந்திப் பிரதமர் மன்மோகன் சிங் எச்சரித்துள்ளதாக லக்பிம நியூஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியாக வேண்டும் என மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் அனைத்து மாகாணங்களுக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தவிர ஏனைய அதிகாரங்களை வழங்க அரசாங்கம் (19ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் அதிகரிக்கும் வீதி விபத்து நேற்று மட்டும் 10 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று நடைபெற்ற வீதி விபத்துக்களில் படுகாயமடைந்த 10இற்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் யாழ்.நகர் ஆஸ்பத்திரிவீதி-கஸ்தூரியார் வீதிச்சந்தியில் நேற்றிரவு 8.00 மணியளவில் பொலிஸாரின் பிக்கப் வாகனத்துடன் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கொட்டடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.ஜசிந்தன் (வயது 21) என்பவர் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை (19ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பை காப்பாற்றும் இறுதி முயற்சியில் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் அணிசேரா நாடுகளிடம் இருந்து உறுதியான ஆதரவை வெளிவிவகார அமைச்சர் பீரிஸால் பெறமுடியாது போயுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிபுணர்கள் குழுவின் அறிக்கை (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation



என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)


# இலங்கை மீனவர்கள் 10 பேர் கைது

இந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்திய கரையோரக் காவற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இம்மீனவர்களின் இரு படகுகளும் இந்திய கரையோர காவற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக பி.ரி.ஐ. செய்திச் சேவை தெரிவித்துள்ளது. காக்கிநாடாவிலிருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் வைத்து சேஜனா, களுபுதா ஆகிய இப்படகுகள் சுமார் 5 ஆயிரம் கிலோ மீன்களுடன் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக இப்படகுகள் காக்கிநாடா துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட 8 ஆவது கைது நடவடிக்கை இதுவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290



# இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்படுவார்

## சீமான் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு

(சென்னை)

வன்னியில் தமிழினப் படுகொலைக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்படுவார் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், 8 ஆயிரம் பேரை இனப்படுகொலை செய்த ராட்கோ மிலாடிச்சிற்கு ஏற்பட்ட நிலை ஜனாதிபதிக்கும் அவரது கும்பலுக்கும் ஏற்படும்.

கம்யூனிச நாடாக இருந்த யுகோஸ்லாவியாவில் இருந்து இன்று தனிநாடாகத் திகழும் பொஸ்னியாவில் 1995ஆம் ஆண்டு ஜுலையில் இனப்படுகொலை நடந்தது. செர்பிய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்துப் போராடிய பொஸ்னிய மக்களை செர்பிய இனவெறி இராணுவம் ஒடுக்கி வந்தபோது பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்ட பொஸ்னிய முஸ்லிம்கள் 40 ஆயிரம் பேர் சிறிபரீனியா எனும் இடத்தில் ஐ.நா.அமைத்த பாதுகாப்பு பகுதியில் தங்கவைக்கப்பட்டனர். அந்த இடத்தை ஐ.நா.அமைதிப்படையைச் சேர்ந்த 400 வீராகள் பாதுகாத்தனர்.

இந்த முகாமைச் சுற்றிவளைத்த செர்பிய படைத் தளபதி ராட்கோ மிலாடிச் தலைமையிலான செர்பிய படைகள் முகாமில் இருந்த ஆண்களையும் சிறுவர்களையும் பல நூற்றுக்கணக்கான பெண்களையும் கொன்றொழித்தது. மொத்தம் 8 ஆயிரத்து 373 முஸ்லிம் ஆண்களும் சிறுவர்களும் நூற்றுக்கணக்கில் பெண்களும் குழந்தைகளும் ஈவிரக்கமின்றி ராட்கோ மிலாடிச் படைகளால் கொல்லப்பட்டு அங்கேயே புதைக்கப்பட்டனர்.

இந்தப் படுகொலை உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இரண்டாது உலகப் போருக்கு பின் நிகழ்ந்த மிகப்பெரிய இனப்படுகொலை இதுவென்று, சிறிபிரீனிசா படுகொலை பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட தீர்ப்பாயமும் அதன் பிறகு பன்னாட்டு நீதிமன்றமும் கூறின.

8 ஆயிரம் பேரைக் கொன்ற செர்பிய தளபதியின் நடவடிக்கையை இனப்படுகொலை என்று உறுதி செய்துள்ள சர்வதேச சமூகம் ஒன்றரை லட்சம் தமிழர்கள் கொல்லப்பட்டதை இன்றுவரை போர்க்குற்றம் என்ற அளவில்தான் பேசி வருகிறது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை கூட இலங்கை படைகளால் பல பத்தாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை போர்க் குற்றம் என்றுதான் கூறுகிறது.

8 ஆயிரம் பேரை இனப்படுகொலை செய்த ராட்கோ மிலாடிச்சிற்கு ஏற்பட்ட நிலை ஜனாதிபதிக்கும் அவரது கும்பலுக்கும் ஏற்படும். தமிழினப் படுகொலைக் குற்றத்திற்காக உரியவர்கள் கைது செய்யப்பட்டு பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படும் நாள் வரும். அந்த நாள் வெகுதூரத்தில் இல்லை. அன்று தமிழர்களின் விடுதலை போராட்டத்திற்கான நியாயம் உறுதியாகி தமிழீழம் பிறக்கும் என அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ந-5)

# கூட்டமைப்புடன் சேர்ந்து பேச முஸ்லிம் காங்கிரஸ் கேட்கவில்லை

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தகவல்

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இடம்பெற்றுவரும் பேச்சுவார்த்தையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிர[illegible]ஸையும் இணைத்துக்கொள்வது தொடர்பில் இ[illegible] வரை அவர்களால் எவ்வித கோரிக்கையு[illegible] தம்மிடம் முன்வைக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திவரும் பேச்சுவார்த்தைகளில் தம்மையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்கள் ஊடகங்களுக்கு அறிவித்து வருகின்றனர்.

ஆனால் இவ்விவகாரம் குறித்து தம்மிடம் முஸ்லிம் காங்கிரஸின் தரப்பில் இதுவரை எவருமே பேசியதில்லை எனவும் அவ்வாறு நேரடியாகக் கேட்டுக்கொண்டால் அது குறித்து தாம் பரிசீலனை செய்வோம் என சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறியுள்ளார்.

அதேவேளை அரசுடன் முஸ்லிம் காங்கிரஸ் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாதரகர் வேலை செய்யத் தேவையில்லை எனவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ந-5)

**கண்ணீர் அஞ்சலி**



அமரர் சிவானந்தவல்லி பூரணச்சந்திரன்

என்னடா வாழ்க்கை என்று
ஏங்குதடா நெஞ்சம் இன்று நொந்து
மண்ணைவிட்டே விரைந்திட்டீர்
எம் மனம் நொந்து தவிக்குதம்மா
கண்ணை இமை காப்பது போல் - எம்
உறவுகளை அனுசரித்தவளே

உறவினர்கள் நண்பர்கள் உடன்பிறப்புக்களின்
நிலையறியாது மறந்தாயோ
சிலையாக கிடக்கின்றாய் சீர்தூக்கிப் பார்த்தாயோ
சிவன்பாதம் இணைந்தாயோ இறைவா

தோற்றம்:02.03.1948
மறைவு:28.05.2011

அன்னாரது பிரிவால் ஆறாத்துயரில் முழ்கியிருக்கும் அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை காணிக்கையாக்குகின்றோம்

பருத்தித்துறை நண்பர்கள்

(C-3332)

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் வர்த்தக நிலையமொன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

- கணக்காளர்
- காசாளர்
- பில்கிளார்க்
- களஞ்சியக் காப்பாளர்
- காகிதாதிகள் மற்றும் பத்திரிகைத்தாள் கையாளுநர்

மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆங்கில அறிவு மற்றும் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொழிலாளர்கள் தகைமையுடையவர்கள் தமது சுயவிபரமும் தொலைபேசி இலக்கமும் அடங்கிய விண்ணப்பங்களை


விளம்பர இல. சி-3325
மே/பா , வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(C-3325)

**கண்ணீர் அஞ்சலி**

**குணசீலன் சதீஸ்குமார்**
(பாப்பா)



வவுனியா மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கச் சாரதி

அன்னையின் மடியில் 1976.11.01 | இறைவன் மடியில் 2011.05.28

இறுதி நிகழ்வு: 30/05/2011

மாங்குளம் தபால் நிலைய தபால் உத்தியோகத்தரும் எமது ஒன்றுவிட்ட சகோதரருமான திரு.எஸ்.சத்தியமூர்த்தி அவர்களின் மருமகன் குணசீலனின் அகாலச் சாவு செய்தியறிந்து வேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தாரின் துயரத்தில் நாமும் பங்குகொள்வதோடு இவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துயரத்தில் பங்குகொள்வோர்:
எஸ்.ஆறுமுகம் (சித்தப்பா குடும்பம்) - மல்லாவி
ஆ.சிவாஸ்கரன் குடும்பம் (லக்சிகா ரவல்ஸ்) - மல்லாவி
க.புண்ணியநாதன் குடும்பம் - மல்லாவி
ஆர்.விஜயகுமார் குடும்பம் - மல்லாவி
செ.அன்ரன் குடும்பம் - மல்லாவி
செ.இரவிச்சந்திரதாஸ் குடும்பம் - மல்லாவி

(5048)

# இன்று ஒரு தகவல்

## எங்கே நிம்மதி

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர், ஓர் அரசர் தன் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்து கொண்டிருந்தார். இருந்தாலும் அவருக்கு மனநிம்மதி இல்லை. எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சினை.

அதனால் அரசருக்கு வாழ்க்கையில் அலுப்பும் சலிப்பும் ஏற்பட்டது. "என்ன செய்யலாம்?" என்று யோசித்தார். இதைப் பற்றி தமது நெருங்கிய நண்பர்களிடம் கலந்து ஆலோசித்தார்.

அவர்கள், பக்கத்தில் இருக்கும் ஒரு பெரிய காட்டில் பெரியவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் சென்றால் ஏதாவது ஒரு வழி கிடைக்கும் என்று ஆலோசனை கூறினார்கள்.

அரசர் உடனே அவர் காட்டுக்குச் சென்று பெரியவரைப் பார்த்தார். அவரது காலில் விழுந்து வணங்கினார்.

"சுவாமி... அரசாங்கத்தை நிர்வகிப்பது எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்று தெரிவித்தார். "அப்படியானால் அதை விட்டு விடேன்!" என்றார் பெரியவர். "நான் விலகி விட்டால் பின்னர் அரச காரியங்களை கவனிப்பது யார்?" என்று மன்னர் வினாவினார்.

அதற்கு பெரியவர் " உன் பிள்ளையிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து விடு" என்றார். "ஒப்படைத்து விட்டு நான் என்ன செய்வது?" என்று அரசர் கேட்டார். "காட்டுக்கு வந்து என் பக்கத்தில் உட்காந்து கொள். நிம்மதியாக இரு" என்று பெரியவர் தெரிவித்தார்.

பின்னரும் அந்த ராஜா ஏதோ யோசனை செய்து கொண்டிருந்தார். "என்ன யோசனை?" என்று அந்த பெரியவர் கேட்டார். "அது வந்து... ஒன்றுமில்லை... என் மகன்... மிகவும் சிறிய பையன். என்னாலேயே தாங்க முடியாத அரச பாரத்தை அவன் எப்படித் தாங்குவான்? என்று யோசிக்கிறேன்" என்றார் அரசர்.

"அப்படியானால்... அதை என்னிடம் கொடுத்து விடு" என்றார் பெரியவர். அதற்கு அரசர், "சரி" என்று ஒப்புக்கொண்டார்.

"சத்தியம் செய்து கொடு" என்று கேட்டார் பெரியவர்.

அதற்கிணங்க அரசரும், "இனிமேல் இந்த இராச்சியம் முழுவதும் உங்களுடையது!" என்று பெரியவரிடம் சத்தியம் செய்து கொடுத்தார் "சரி.. இராச்சியத்தை என்னிடம் கொடுத்து விட்டாய். இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று பெரியவர் கேட்டார்.

"அரண்மனைக் கருவூலத்திலிருந்து கொஞ்சம் பொன் எடுத்துக் கொண்டு வெளி தேசம் எங்கேயாவது சென்று விடுகின்றேன். அங்கே போய் ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்றார் இவர்.

"அரண்மனைக் கருவூலம் இப்போது எனக்குச் சொந்தம்? அதிலிருந்து நீ எப்படி பொன்னோ பணமோ எடுக்க முடியும்?" என்றார் இவர்.

அதற்கு அரசர், "நீங்கள் சொல்வது சரிதான். அப்படியானால் நான் வேறு எங்கேயாவது சென்று ஏதாவது செய்து பிழைத்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்தார். "சரி... இப்போது வேலை செய்வது என்று நீ முடிவுசெய்து விட்டாய். அதை ஏன் நீ வேறு எங்கேயாவது போய்ச் செய்ய வேண்டும்? இங்கு என்னிடமே செய்யலாம்!" என்றார் பெரியவர்.

"சரி, அப்படியே செய்கிறேன். இங்கேயே ஏதாவது வேலை செய்கிறேன். தாங்கள் எனக்கு ஒரு வேலை கொடுங்கள்!" என்று கேட்டார் ராஜா.

பெரியவர் ராஜாவிடம், நீ ஏற்கனவே ராஜாவாக இருந்து பழக்கப்பட்டவன். ஆதலால் எனக்குப் பதிலாக நீ இராச்சியத்தைக் கவனித்துக் கொள். உன்னுடைய வேலைக்கு உனக்கு சம்பளம் தருகிறேன். கடமையைச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. அதில் உள்ள நல்லது கெட்டதுக்கு நான் பொறுப்பு. நீ உன் வேலையைச் செய்து விட்டு மாதாமாதம் என்னிடம் சம்பளம் வாங்கிக் கொள்" என்றார்.

அப்படியே செய்தார் அந்த ராஜா. முன்பு என்ன செய்து கொண்டிருந்தாரோ... அதையேதான் அவர் இப்பவும் செய்கிறார். ஆனால் இப்போது கவலையில்லாமல் நிம்மதியாக இருந்தார். பிரச்சினைகள் பெரிதாகத் தெரியவில்லை. நிம்மதியாக அவரால் தூங்க முடிந்தது. "என்னுடைய கடமையினை நான் செய்கிறேன். இந்த அரசாங்கம் என்னுடையதல்ல! என்ற நினைப்புத்தான் அவருடைய அந்த நிம்மதிக்குக் காரணம்.

ஒரு மாதம் சென்றபின் அந்தப் பெரியவரை ராஜா சந்தித்தார். " புதுவேலை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார் பெரியவர். மனநிறைவையும், நிம்மதியையும் அளிக்கிறது என்றார் ராஜா.

அரசாங்கம் உன்னுடையது என்று நினைத்த போது அவதி. அது உன்னுடையதில்லை என்று தெரிந்ததும் நிம்மதி. பற்றில்லாமல் கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே. இதுதான் நிம்மதிக்கு வழி. இதையே நீ புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் இப்படிச் செய்தேன்! என்றார் பெரியவர்.

நாமும் அதைப் புரிந்து கொண்டால் நிம்மதியாக வாழலாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமாகாணத்திலிருந்து 15 ஆயிரம் பேரை மொழிபெயர்ப்பாளர்களாக இணைக்கத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலிருந்து 15 ஆயிரம் பேர் மொழிபெயர்ப்பாளர்களாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் நாடாளுமன்ற விவகார செயலாளர் டபிள்யூ.கே. விலேகொட தெரிவித்துள்ளார்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் கந்தர்மடத்திலுள்ள யாழ்பாடி விருந்தினர்விடுதியில் நேற்று பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம் பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பாக வடமாகாணத்திலுள்ள மக்களின் கருத்து எவ்வாறுள்ளது என்பதை அறியவே நாம் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளோம்.

யுத்தத்தின் பின் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எமது அமைச்சு பாரியளவில் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க முடியாது. அது படிப்படியாகவே நிறைவேற்றி வைக்கப்படும். 30 வருடமாக இடம் பெற்ற யுத்தஅழிவுகளில் இருந்து மீண்ட மக்களின் பிரச்சினைகளை குறித்த சில ஆண்டுகளுக்குள் தீர்த்து விட முடியாது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மொழிப் பிரச்சினையை தீர்ப்பதற்காக எமது அமைச்சு சகல பிரதேசத்திலும் மொழிகள் மத்திய நிலையத்தை நிறுவி வருகிறது.

மொழியை அனைவரும் இதயபூர்வமாக நேசிக்க வேண்டும். ஏனைய மொழிகளையும் மதித்து நடக்க வேண்டும்.

தமிழ்மொழி பேசுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது. அரச திணைக்களங்களில் தமிழ்மொழியின் பங்களிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளமை இதற்கு சான்று.

இதன் வெளிப்பாடாகவே வடமாகாணத்திலிருந்து 15 ஆயிரம் பேரை மொழிபெயர்ப்பாளர்களாக இணைத்துக் கொள்ளும் தீர்மானத்தை எமது அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்கள் நாட்டின் சகல பாகங்களிலும் பணிபுரிய உள்ளனர். இதன் மூலம் மொழிப்பிரச்சினை ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதுதவிர 200 பேர் சமூக மேம்பாட்டு அதிகாரிகளாக வடமாகாணத்திலிருந்து நியமிக்கப்படவுள்ளனர்.

அதுமட்டுமின்றி மொழிபெயர்ப்பாளர்கள்மத்தியநிலையத்தை நாடளாவிய ரீதியில் நிறுவி மொழிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது. இது சில பிரதேசங்களில் தற்போது நடைமுறையில் உள்ளது.

பௌத்த துறவிகள் தமிழ் மொழியை அறிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தை தமிழ் மதத்தலைவர்கள் காட்டுவதில்லை எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதுமட்டுமின்றி தமிழ் பத்திரிகையாளர்களுக்கு சிங்களமொழிப்பயிற்சிநிலையங்கள் ஊடாக சிங்கள மொழியை கற்பிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இதுவரை காலமும் ஆங்கிலத்தில் மட்டும் பதிவு மேற்கொள்ளப்பட்டு வந்த கடவுச் சீட்டுப்பதிவுகள் மும்மொழியிலும் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு இந்த சந்திப்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர் கலாநிதி எஸ்.மோகனும் கலந்து கொண்டார். (ஶ்ரீ-6)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 45 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 90 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 80 | 80 | 70 |
| கரட் | 70 | 100 | 90 |
| பூசணி | 25 | 40 | 30 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 15 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 50 |
| பாகற்காய் | 70 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | - | 80 | - |
| பயற்றங்காய் | 40 | 60 | 70 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | - | 80 | 60 |
| கறிமிளகாய் | 90 | 60 | 90 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 300 |
| போஞ்சி | 100 | 100 | 80 |
| கத்தரிதம்புள்ள | - | 40 | 50 |
| கீரை - 1 பிடி | 6-10 | 30 | 30 |
| தேசிக்காய் | 140 | 150 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 50 |

# இராசி பலன்

**30.05.2011**
**(வைகாசி 16, திங்கட்கிழமை)**
**சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு**
**திரயோதசி முன்னிரவு 1.14 மணிவரை**
**அச்சுவினி முற்பகல் 10.15 மணிவரை**
**இராகுகாலம் 7.22-8.52 மணிவரை**
**சுபநேரம் 11.52-1.22 மணிவரை**
**பிரதோச விரதம்**

**மேடம்** நந்தி வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முன்வருவீர்கள், நீங்கள் சந்திக்க நினைத்த நபர் உங்களைத் தேடிவரலாம்.

**இடபம்** மனக்குழப்பமான நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், இடமாற்றச் சிந்தனை மேலோங்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் தோன்றும்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெற வேண்டிய நாள், தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு துணைபுரியும், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கடகம்** திட்டமிட்ட காரியங்கள் சரியாக நடைபெறலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும், தொல்லை கொடுத்தவர்கள் தோள் கொடுத்து உதவ முன்வருவர்.

**சிங்கம்** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், மறைமுக எதிர்ப்புக்களை எளிதில் சமாளிப்பீர்கள், சொத்து பிணக்குகள் சுமுகமாக முடியும்.

**கன்னி** சிவமைந்தன் வழிபாட்டல் சுகம் காணவேண்டிய நாள், உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எதிர்பாராத வகையில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம்.

**துலாம்** சுற்றத்தார் வருகையால் சுகம் காண்பீர்கள், களஸ்திர நன்மையுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பணவரவு திருப்தி தரும், போட்டிகளில் வெற்றி கிடைக்கும், இல்லத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.

**தனுசு** கோயில் வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், எதிர்காலத்தை அமைத்துக் கொள்ள புதிய வழிபிறக்கும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மகரம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், வாகன யோகமுண்டு, விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்புண்டு.

**கும்பம்** சுதந்திரமாகச் செயற்படும் நாள், குடும்பத்தினர் உங்களின் ஆலோசனையைக் கேட்டு நடக்க முன்வருவர், வியாபார விருத்தி ஏற்படும்.

**மீனம்** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

வளவன்

# களனி கங்கை பெருக்கெடுப்பு; மண்சரிவு ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக களனி கங்கை பெருக்கெடுத்துள்ளதால் களனி கங்கைக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதனால் கொழும்பு, அவிசாவளை வரை களனி கங்கைக்கு அண்மித்த பகுதிகளிலுள்ள மக்கள் பாதுகாப்புடன் அவதானமாக இருக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மாவட்டங்கள் பலவற்றுக்கு மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டடவாய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி களுத்துறை, கேகாலை, காலி ஆகிய மாவட்டங்களில் அதிகளவான மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக அந்த திணைக்களத்தின் மண்சரிவு தொடர்பாக அதிகாரி பண்டார தெரிவித்துள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை, பாலிந்தநுவர, புளத்சிங்கள ஆகிய பிரதேசங்களில் இந்த நிலைமை காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் காலி மாவட்டத்தில் நெலுவ, தவலம ஆகிய பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கேகாலை மாவட்டத்தில் தெரணியகலை, எட்டியாந் தோட்டை, ருவன்வெல்ல, புளத்கொஹுபிட்டிய ஆகிய பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இனந்தெரியாத நபர்களினால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

50 வயதான என்.கமகே என்ற நபரே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு நபர்கள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. இத்தாக்குதல் சம்பவத்திற்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பாக அம்பாந்தோட்டைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# இலங்கை உணவு வகைகளினுடைய மாதிரிகள் சர்வதேச அணுசக்தி நிலையத்திற்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

இலங்கை உணவு வகைகளின் மாதிரிகளை சர்வதேச அணுசக்தி முகவர் நிலையத்தின் சேகரிப்பு செயற்றிட்டம் ஒன்றுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அணுசக்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

ஜப்பானின் புகுஷிமா அணு உலையில் ஏற்பட்ட வெடிப்பினால் வெளியாகும் கதிரியக்கத் தாக்கம் நாட்டிற்கு கொண்டு வரப்படும் உணவுப் பொருட்களில் கலந்துள்ளதா என்பதைக் கண்டறிவதே இதன் நோக்கம் என அதிகார சபையின் தலைவர் கலாநிதி நிமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

இந்த செயற்றிட்டத்திற்கு தற்போது 38 நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் வகைகளின் 75 மாதிரிகள் தற்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இம்மாதிரிகளில் கதிர் இயக்கத் தாக்கம் ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படவில்லை என சர்வதேச அணுசக்தி முகவர் நிதியம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அப்பிள், திராட்சை ஆகியவற்றின் மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திரிகள் குடும்ப முன்னேற்றம் கருதிச் செயற்படுகின்றனர்

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு



(கொழும்பு)


வெளிநாடுகளிலுள்ள இலங்கையின் இராஜதந்திரிகள் தமது குடும்ப முன்னேற்றத் தை முன்னிறுத்திச் செயற்படுவதன் காரணமாகவே சர்வதேச மட்டத்தில் இலங்கை குறித்த தவறான பிரசாரங்கள் வலுப்படுவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுமக்களின் வரிப்பணத்தில் இருந்து சம்பளம் பெற்றுக் கொள்ளும் பெரும்பாலான இராஜதந்திரிகள் வெளிநாடுகளுக்குச் சென்றவுடன் தங்கள் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வி உள்ளிட்ட குடும்ப முன்னேற்றம் கருதிய செயற்பாடுகளுக்கே முதலிடம் கொடுக்கின்றனர் என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டுகின்றார்.

அதன் காரணமாகவே அவர்களால் இலங்கைக்கு ஆதரவான முறையில் சர்வதேச மட்டத்திலான பிரசாரங்களை மேற்கொள்ளவோ அல்லது எதிர்ப்பிரசாரங்களை முறியடிக்கவோ செயலற்றவர்களாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

அதன் காரணமாக வெளிநாடுகளில் விடுதலைப் புலிகள் உள்ளிட்ட அரசாங்கத்துக்கு எதிரானவர்களின் செயற்பாடுகள் பலமான நிலையை அடைந்துள்ளதாக குறிப்பிடும் அமைச்சர் விமல் வீரவன்ச அதற்கான ஒரே தீர்வாக இலங்கையின் வெளிநாட்டுச் சேவை முற்றிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். (ஸ்ரீ-2)











யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு மற்றும் கடன் உதவி வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் புனர்வாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதில் கலந்துகொண்ட விருந்தினர்களை முதலாவது படத்திலும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்படுவதை அடுத்த இரு படங்களிலும் நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகளை நான்காவது படத்திலும் காணலாம்.


மண்டைதீவு புனித பேதுருவானவர் சனசமூக நிலையம் ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று அப்பகுதியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றது. இதில் அப்பகுதி கிராம சேவையாளர் ஆ.ரமேஷ் உரையாற்றுவதையும் பத்திரிகை கொள்வனவை உள்ளூராட்சியலுவல்கள் சனசமூக நிலைய உத்தியோகத்தர் எம்.மகேந்திரனிடமிருந்து சனசமூக நிலைய அங்கத்தவர் ஒருவர் பெற்றுக் கொள்வதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- அலுவலக செய்தியாளர்)*

# அவசரகால சட்டத்தை நீக்கக்கூடாது; தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து நாட்டின் அவசர காலச் சட்டத்தை நீக்கக் கூடாது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார். வெளிநாட்டு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அண்மையில் இந்தியா சென்றிருந்த போது அவரால் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது.

இதில் அவசர காலச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அது இலங்கைக்கு இந்தியா வழங்கிய அழுத்தம் என அவர் குறிப்பிட்டுள்ளார். அவசர காலச்சட்டம் உள்நாட்டு அரசியல்வாதிகளால் தான் நீக்கப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவினருக்கான மாகாண மட்ட மதிப்பீட்டுப் பரீட்சை

(பூநகரி)

2011 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்டத்திலான மதிப்பீட்டுப் பரீட்சை புதிய வினாத்தாள் மாதிரிக்கமைய எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகி 17 ஆம் திகதி வரை உரிய நேரசூசிக்கமைவாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதற்கமைய பரீட்சைக்குரிய வினாத்தாள் பொதிகளை உரிய பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி கிளிநொச்சி வலய கல்வி அலுவகத்தில் பெற்று பரீட்சைகளை நடாத்துவதோடு விடைத்தாள்களை மதிப்பீடு செய்து ஒரு வாரத்தில் கல்வி அபிவிருத்திப் பிரிவிற்கு புள்ளிப் பகுப்பாய்வுடன் அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இதில் 8 ஆம் திகதி தரம் 9-12 வரைக்குமான உயிரியல் பகுதி-II, இணைந்த கணிதம் பகுதி-II பரீட்சைகளும் 9 ஆம் திகதி தரம் 9-11 வரைக்குமான உயிரியல் பகுதி-I, தரம் 9-12 வரைக்குமான இணைந்த கணிதம் பகுதி- I பரீட்சையும் 13 ஆம் திகதி 9-12 வரைக்குமான பௌதீகவியல் பகுதி-II பரீட்சையும் 14ஆம் திகதி 9-12 வரைக்குமான பௌதீகவியல் பகுதி-I பரீட்சையும் 16ஆம் திகதி தரம் 9-12 வரை இரசாயனவியல் பகுதி-II பரீட்சையும் 17ஆம் திகதி தரம் 9-11வரை இரசாயனவியல் பகுதி -I பரீட்சையும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-84)

# நாட்டில் எலிக்காய்ச்சலால் நாற்பத்தேழு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் எலிக்காய்ச்சலினால் இந்த ஆண்டில் இதுவரை 47 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை எலிக்காய்ச்சலினால் 3 ஆயிரத்து 579 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் 404 பேர் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் குருநாகல் மாவட்டத்திலேயே தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக அந்த பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி ஜனவரி மாதத்தில் 230 பேரும் பெப்ரவரி மாதத்தில் 571 பேரும் மார்ச் மாதத்தில் ஆயிரத்து 615 பேரும் ஏப்ரல் மாதத்தில் 759 பேரும் எலிக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு 967 சிறுவர்கள் சிகிச்சை பெற்றுவருவதாக பொரளை போதனாவைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ரட்னசிறி ஹேவகே தெரிவித்துள்ளார். இவர்களில் 281 பேருக்கு டெங்கு தொற்று இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


அத்துடன் 19 சிறுவர்களுக்கே டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# சங்காபிஷேகம்

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாவிலுள்ள அருள்மிகு ஐயப்பன் ஆலய சங்காபிஷேக உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இரவு பெரும் பொங்கல் நிகழ்வும் காவடி நேர்த்தியும் அதிகாலை அன்னதானமும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-84)



கடந்த கால போர்ச் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சமூகநலன் குழுவினரின் நிதியுதவியுடன் தையல் இயந்திரங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கலாசார அன்னதான மண்டபத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் சமூகநலன் குழுத்தலைவர் விடைகொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா,உலகசைவப்பேரவை இலங்கைக் கிளை உபதலைவர் கே.தம்பிராசா ,வவுனியா சிந்தாமணி பிள்ளையார் அறங்காவலர் சபைத்தலைவர் வி.தேவகுமாரன், மாமன்ற சமூகநலன் குழு உறுப்பினர்களான தே.கிரிதரன் , திருமதி வி.தயாபரநாதன் ,மாமன்ற நிர்வாக அலுவலர் சி.சிதம்பரரேஸ்வரசர்மா,கலாபூசணம் செல்லத்தம்பி மாணிக்கவாசகர் ஆகியோருடன் மன்ற உறுப்பினர்கள் நிற்பதை படத்தில் காணலாம்.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 24 . 02 . 1953



இறப்பு 30 . 04 . 2011

## திருமதி. செல்லம்மா இராசேந்திரம்

(மலர்)

தாரமாய் தாயாய் அரவணைத்த அன்புருவே
கனவுகள் பலவோடு நாம் காத்திருந்த வேளையில்
காலனோடு விடைபெற்று போனதேனம்மா
பாசமழை பொழிந்து எமைப்பேணி – இன்று
பாவிகளாய் மீளாத் துயரில் பரிதவிக்க விட்டதேனோ...

எமது இல்லத்தலைவி அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தியறிந்து உடன் வந்து எம் துயரில் பங்கெடுத்தும் பலவழிகளில் உதவிகள் புரிந்தும் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியும் இது நாள் வரை எமக்கு ஆறுதலாய் இருக்கின்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்றும் (30.05.2011) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னையின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


(தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

நியூ பிரிந்தா ஸ்ரோர்ஸ்,
அல்லாரை வடக்கு, மீசாலை.

குடும்பத்தினர்

(5046)






வடமாகாணத்திற்கு புதிதாக நியமனம் பெற்ற தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண கல்வியமைச்சின் உதவிச் செயலாளர் வே.தி.செல்வரட்ணம் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## வேளாங்கன்னி அன்னை பெருவிழா

(குருநகர்)

குருநகரில் அமைந்துள்ள வேளாங் கன்னி அன்னையின் பெருவிழா எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி புதன் கிழமை நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடு நடைபெற்று எதிர்வரும் 3 ஆம் திகதி வெள் ளிக்கிழமை மாலை 5 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

போர்க்கால சூழ்நிலையில் முற்றாக சேத மடைந்த இவ்வாலயம் தற்காலிகமாக புன ரமைக்கப்பட்டு நடைபெறும் நிருநாள் திருப் பலி என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-39)

# ஆங்கில தினமும் கற்றல் கண்காட்சியும்

(மந்துவில்)

சாவகச்சேரி யா/சந்திபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய ஆங்கில கல்வி மன்றம் நடத்தும் ஆங்கில தினமும் ஆரம்பக் கல்வி மன்றம் நடத்தும் ஆரம்பக் கல்வி கற்றல் கண்காட்சியும் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் வே.கந்த சாமி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.சிறீஸ்கந்தராஜா, யாழ்.கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை உப அதிபர் வீ.கருணலிங்கம், வடமாகாணக் கல்வித் திணைக்கள ஆங்கிலக் கல்வி இணைப்பா ளர் வே.சிறீதரன், தென்மராட்சி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திருமதி அமிர்த்தி திருக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற கணித ஆசிரியர் க.சரவணபவன், தென் மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவை க்கால ஆசிரிய ஆலோசகர் ஏ.மனோரஞ் சிதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் ஆங்கில தின நிகழ்வு காலை 9 மணிக்கும் ஆரம்பக் கல்வி நிகழ்வு காலை 11.30 மணிக்கும் இடம்பெறும். (ஸ்ரீ-2-102)

## இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா வில் வடமராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் 20 இற்கு இருபது கிரிக்கெட் சுற்றுப் போட்டி யில் நாளை மறுதினம் புதன்கிழமை பிற் பகல் 3.30 மணிக்கு கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து கரவெட்டி திருவள்ளுர் அணி மோதவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை 3.30 மணிக்கு வல்வெட்டி ஒற்றுமை அணியை எதிர்த்து கரவெட்டி மகேசன் அணி மோத வுள்ளது. (ஸ்ரீ-24)

யாழ்.செய்திகள்

# சனசமூக நிலையம் 22 வருடங்களின் பின் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது

(மண்டைதீவு)

மண்டைதீவு புனித பேதுருவானவர் சன சமூக நிலையம் 22 வருடங்களின் பின் தற் காலிகமாக இயங்க ஆரம்பித்துள்ளது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக இந்த சனசமூக நிலையத்தின் பணிகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

யுத்தம் நிறைவடைந்து மக்கள் மீள்குடி யேற்றப்பட்டு வரும் சூழ்நிலையில் இது மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

குறித்த சனசமூக நிலையத்திற்கு தற் போது சொந்த காணியில்லை என்பதால் அப்பகுதியிலுள்ள ஜிம்பிறவுண் அறிவகத் தில் தற்காலிகமாக இயங்கவுள்ளது.

சனசமூக நிலையத்திற்கான நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அதற் கென 8 இலட்சம் ரூபாவிற்கு மேல் நிதி தேவைப்படுவதாகவும் சனசமூக நிலையத் தலைவர் பா. ஜதீஸ்பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

மேலும் உத்தியோகபூர்வ பதிவு செய்வதற் கான நடவடிக்கைகளையும் தாம் முன்னெ டுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆயிரத்து 500 பேர் இப்பகுதியில் வசி த்து வருவதாகவும் அவர்கள் தமது அறிவை வளர்த்துக் கொள்ளக்கூடியதானதொரு சன சமூக நிலையம் இப்பகுதிக்கு தேவை எனக் கருதியே தாம் இந்த முயற்சியை மேற் கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நிகழ்வில் அருட்தந்தை வணபிதா.விஜிண்டஸ், உள்ளூராட்சி சனச மூக நிலைய உத்தியோகத்தர் எம்.மகேந் திரன், வேலணை பிரதேச சபை உப அலு வலக அதிகாரி அருணன், கிராம சேவை யாளர் ஆ.ரமேஷ், சனசமூக நிலைய ஊழியர் கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஸ்ரீ-6)

# வடமாகாணத்தில் நிலவும் கல்விசார் பிரச்சினைகளை தீர்க்கவே ஆசிரிய நியமனம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் கல்வியில் ஏற்பட்டுள்ள பின்னடைவையும் பிரச்சினைகளையும் தீர்க் கும் முகமாகவே தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் நியமனம் இடம்பெறுவதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

'வடமாகாணத்தில் தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து பட்டப்படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கு ஆசிரியர் நியமனம் அண்மையில் கொழும்பில் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

அவ்வாறு நியமனம் வழங்கப்பட்ட ஆசிரியர் களுடன் நேற்று யாழ். வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலையில் வடமாகாண ஆளுநரு டன் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்,

ஆசிரியராக நியமனம் பெற்ற உங்களுக்கு எமது எதிர்பார்ப்புக்கள் என்னவென்பதையும் வடமாகாணத்தில் கல்வியில் தற்போதைய நிலை பற்றி விளக்குவதற்கு உங்களைச் சந்திக்கின்றேன்.

நியமிக்கப்படும் 248 தேசிய கல்வியியல் டிப்ளோமாதாரிகளில் 159 பேருக்கு தேசிய பாடசாலை நியமனங்களும் 89 பேருக்கு மாகாணப் பாடசாலை நியமனங்களும் வழங் கப்பட்டுள்ளன.

தேசிய கல்வியமைச்சின் தீர்மானத்திற் கமையவே இந்நியமனம் இடம்பெறுகிறது. வடமாகாணத்திலுள்ள கல்விப் பிரச்சினைக ளைத் தீர்ப்பதற்காக மட்டுமே நீங்கள் நிய மிக்கப்பட்டுள்ளீர்கள். கல்வியில் உயர் நிலை யைப் பெறுவதற்காக அதிகளவு உட்கட்டு மானங்களுக்கான நிதி விடுவிக்கப்பட்டுள் ளது. கல்வியின் உயர்நிலையை மீளப் பெறு வதே எமது நோக்கம்.

இந்த முன்னுரிமையை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். கற்பிப்பது மட்டுமல்ல நல்ல பிரஜைகளை உருவாக் குவதும் உங்கள் கடமையேயாகும். நீங்கள் முன்மாதிரியாக இருப்பதன் மூலம்தான் உங்களை மாணவர்கள் பின்பற்றுவர்.

எனவே உங்கள் செயற்பாடுகள் சிறப் பானதாக இருக்க வேண்டும். உங்களுடைய தர த்தை மேம்படுத்த பல்வேறு செயற்றிடங் களையும் நாம் முன்னெடுத்து வருகிறோம்.

நல்லொழுக்கமுடைய ஆசிரியர் சமூகத் தினரையே நாம் எதிர்பார்க்கிறோம். இளம் சமுதாயத்தை சேர்ந்த நீங்கள் அதிகளவு வேலைகள் செய்ய வேண்டும்.

அரச சேவைக்கு அரசின் கொள்கைக் கேற்ப நீங்கள் வருகை தந்துள்ளீர்கள். எனவே அரச சேவையாளர்கள் ஜனாதிபதி யின் மஹிந்த சிந்தனைக்கேற்ப பொது மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# எஜமானர் வீட்டில் நகை திருடிய இருவருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

எஜமானரின் வீட்டில் நகை திருடிய இரு வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத் தித்துறை நீதிமன்றம் கடந்த வெள்ளிக் கிழமை உத்தரவிட்டது.

வல்வெட்டித்துறை வேதியன் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் 2008 ஆம் ஆண்டு எஜமானர் ஒருவரின் வீட்டில் வேலை செய்த சமயம் அங்கிருந்த ஒரு இலட்சத்து 17 ஆயி ரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை களவாடிய கணவன்- மனைவி இருவரும் தலைமறைவாகியிருந்தனர்.

குறித்த நபர்கள் இருவரையும் வல் வெட்டித்துறை பொலிஸார் தேடி வந்துள் ளனர்.

இருவரையும் சம்பவதினம் கைது செய்த பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை பருத் தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்ப் படுத்தினர்.

இருவரையும் விசாரணை மேற் கொண்ட நீதிபதி, இருவரையும் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-24)

# வலைப்பந்து, எல்லே, கிரிக்கெட் போட்டிகளில் கம்பன், வதிரி டைமன்ஸ் அணிகள் சம்பியன்

(கரவெட்டி)

வலைப்பந்து, கிரிக்கெட், எல்லே போட்டி களில் கம்பன், வதிரி டைமன்ஸ் அணிகள் வெற்றிபெற்று பிரதேச சம்பியனாகிது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செய லாளர் பிரிவில் இளைஞர் கழகங்களுக்கி டையில் நடைபெற்று வரும் போட்டிகளில் வலைப்பந்தாட்டப் போட்டி கடந்த23 ஆம் திகதி கம்பர் மலை கம்பன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் மாலுசந்தி மைக்கல் அணியை எதிர்த்து ஆடிய கம்பன் அணி 7:9 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம் பியனாகியது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இமையா ணன் மத்திய அணியை எதிர்த்து ஆடிய வதிரி டைமன்ஸ் அணி வெற்றிபெற்று சம்பிய னாகியது.

கடந்த 28 ஆம் திகதி மாலுசந்தி மைக் கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற எல்லே போட்டியில் கம்பர் மலை கம்பன் அணியை 1:2 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்ற வதிரி டைமன்ஸ் அணி சம்பியனாகியது. (ஸ்ரீ-24)

# அரசாங்கத்தின் பாதையில் தமிழ்க் கூட்டமைப்பினர்

போரினால் உருக்குலைந்துபோன வடக்கு கிழக்கில் மனித உரிமை மீறல் சம்பவங்களை ஒவ்வொன்றாக விசாரிப்பதற்கென உயர்மட்ட, அனுபவம் வாய்ந்த நீதிபதிகளை நியமிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் அரசாங்கத்தினால் நன்கு ஆலோசித்து எடுக்கப்பட்டுள்ளமையை விளங்கிக்கொள்ள முடியும். தருஸ்மன் அறிக்கையின் பின்னணியில் நோக்கும்போது இது காலம்பிந்திய நடவடிக்கையாகவும் உள்ளது. எப்படியிருப்பினும் மனித உரிமை விடயத்தில் சர்வதேச சமுதாயத்தின் அக்கறையை எதிர்கொள்ள இது ஒரு நல்ல அடிப்படையை வழங்க முடியும்.

இந்த தீர்மானம் சர்வதேச அளவில் இலங்கையின் நண்பர்களை கருத்தில் கொண்டே எடுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. உலகின் தெற்கு நாடுகள் இலங்கைக்கு உதவி செய்வதற்கு உதவும் முகமாக அரசாங்கம் இதை செய்துள்ளது.

குறிப்பாக தருஸ்மன் அறிக்கையின் அடிப்படையில் இலங்கை அரசாங்கத்தின் மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் ஐ.நா. மற்றும் வேறு இடங்களில் முன்வைக்கப்படும் போது இலங்கையின் நட்பு நாடுகளுக்கு இது பயன்படும்.

இலங்கை, தருஸ்மன் அறிக்கைமீது குற்றங்காணும் போது சட்டப் பிரச்சினைகளையே எழுப்புகின்றது. அறிக்கையின் உள்ளடக்கத்தை அரசாங்கம் மறுக்கவில்லை. விவரமாக பதிலளிப்பது அறிக்கைக்கு 'மரியாதை' செய்வதாக அமையும் என அரசாங்கம் சிந்திக்கின்றது போலும்.

இலங்கை அரசாங்கம், சர்வதேச சமூகத்துக்கு குறிப்பாக அதன் நண்பர்களுக்கு தான் நேர்மையாக செயற்படுவதாக காட்ட வேண்டியுள்ளது.

உலகின் கவனம் வேறு முக்கிய நெருக்கடிபற்றி அக்கறை கொள்ளும்வரை காலம் கடத்துவதற்காகவே இலங்கை, விசாரணை குழுக்களை அமைக்கின்றது என்ற கருத்து பரவலாக உள்ளது. நீதிபதி பகவதி குழு இதற்கு உதாரணமாகும்.

அரசாங்கம் அதன் நண்பர்களுக்கு தொடர்ந்து அலுப்பு கொடுக்க முடியாது. யுத்தத்தின் இறுதி நாட்களில் என்ன நடந்தது என்பதை மீள்பார்வைக்கு உட்படுத்த வேண்டும். இதன் மூலம் இந்த பிரச்சினையை வைத்துக்கொண்டு சர்வதேச சமூகம் இலங்கையை இக்கட்டான, சங்கடமான நிலைமைக்கு உட்படுத்துவதை தவிர்க்க முடியும்.

அரசாங்கம் இந்த பிரச்சினை தொடர்பில் வீட்டு வேலை செய்யவில்லை. பதிலாக இது ஆரம்பத்திலிரிந்தே எதையும் மறுக்கும் போக்கையே பின்பற்றி வருகிறது.

ஆரம்பத்திலிருந்தே தருஸ்மன் அறிக்கை நம்பகமற்ற ஒன்றாகவே உள்ளது. இலங்கைக்கு வீட்டோ அதிகாரமுள்ள ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் நண்பர்களாக உள்ள நிலையில் ஐ.நா.வின் பாதுகாப்புசபை மனித உரிமை கவுன்ஸில் என்பவற்றில் இந்த அறிக்கை ஏற்கப்படும் என யாரும் கருதியிருக்க முடியாது.

தமிழ் தேசிய கூட்டமைப்பையும்

## சீனாவிடமும் ரஷ்யாவிடமும் உதவி கோரவைத்த தருஸ்மன் அறிக்கை

அரசாங்கத்தின் பாதையில் சென்று சீனாவிடமும் ரஷ்யாவிடமும் உதவி கோரவைத்த தருஸ்மன் அறிக்கையின் சாதனையாகும். அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் றொபர்ட் பிளேக்கின் முயற்சியின் காரணமாக தருஸ்மன் அறிக்கைபற்றிய தன் கடுமையான கருத்தை சீனா கைவிட்டுள்ளது.

இலங்கையுடன் நல்லிணக்கத்தை காண பிளேக் விரும்பியமை, ஜி.எல்.பீரிஸின் சீனா இலங்கைக்கு பூரண ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டை அறிவித்தமை காரணமாக இருக்கலாம்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காக நியமிக்கப்பட்ட தருஸ்மன் குழு, ஏதோ ஒருவகையில் வழக்கு தொடருநராக



மாறிவிட்டது. கடந்தகாலங்களில் சமாதான பேச்சுவார்த்தையில் ஏற்பாட்டாளர்கள் போல இந்தக்குழுவும் நடந்துள்ளது. சீனாவும் ரஷ்யாவும் எந்தவடிவில் வந்தாலும் எப்போது வந்தாலும் இந்த அறிக்கையை எதிர்க்கும் என நன்கு தெரிந்திருந்தபோது, ஒரு ஆலோசனைக்குழுவை நியமிப்பதனால் பான் கீ மூன் எதனை சாதிக்க நினைத்தார்?

இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியது. என்பது உண்மையே. இலங்கை அரசாங்கீத்தின் மீது ஒரு நீதிமன்றத்தில் இந்த அறிக்கையை முதல் தகவல் அறிக்கையாக (எப்.ஐ.ஆர்) கொண்டு யாராவது வழக்கு தாக்கல் செய்தால் ஐ.நா இந்த அறிக்கையை ஆராயவேண்டி இருக்கும்.

இதுவே எதிர்பார்க்கப்பட்ட நோக்கமாக இருந்தால் அது அடையப்பட்டு விட்டது. அரசியல் நோக்கில் புலம் பெயர்ந்தோர் குழுக்களுக்கு இந்த அறிக்கை சில பிழையான நம்பிக்கைகளை கொடுத்திருக்கலாம். சகலதும் கைவிட்டுப் போன நிலையில் புலம்பெயர்ந்தோரில் சிலருக்காக இது எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையைக் கொடுத்திருக்கலாம்.

சர்வதேச சமூகம் விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை இரும்புக்கரம் கொன்டு நசுக்க தற்போதும் தயாராக இருப்பதையே நெடியவன் நோர்வேயில் கைது செய்யப்பட்டமை வெளிப்படுத்துகின்றது. குமரன் பத்மநாதனை (கே.பி) டச்சு அதிகாரிகள் சந்திப்பதற்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கான இலங்கையின் பதிலானது இன்னும் நீடிக்கும் பொது கரிசனைகளை காட்டுகின்றது.

கே.பியை ராஜீவ்காந்தி கொலை பற்றியோ தி.மு.க விடமிருந்து பிரபாகரன் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படும் போஷிப்பு பற்றியோ பேச அனுமதிக்க முன் கே.பியை தடுத்து வைத்திருப்போர் இந்திய அரசியல் பற்றி கற்றுக்கொள்வது நல்லது. கே.பி இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பிலிருந்தபோது, இவ்வளவு காலமாக ராஜீவ் கொலையையிட்டு மன்னிப்பு கேட்கவில்லை. இது நம்பகத் தன்மை பற்றிய சந்தேகத்தை எழுப்புகின்றது.

நேடியவனின் கைது புலம்பெயர்ந்தோரிடையேயுள்ள மிதவாதிகளை பிரித்துக்காட்டி, அவர்களின் செயற்பாடு சட்டரீதியானது என வெளிப்படுத்தியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பிரதம மந்திரியைக் கொண்டுள்ள நாடுகடந்த தமிழீழ அரசு கொழும்புக்கு கவலை தரும் விடயமாக உள்ளது. புலிகளுக்கு பின்னரான புலம்பெயர்ந்தோர் குழுக்கள் தமது தந்திரோபாயத்தை மாற்றியுள்ளனவே தவிர தமது இலக்கையோ உபாயத்தையோ மாற்றிக்கொள்ளவில்லை.

தமிழில்
ந.கிருஷ்ணராசா

## போலி சுற்றுலா விசாவில் மலேசியா செல்லவிருந்த 11 பேர் கைதாகினர்

(கொழும்பு)

போலி சுற்றுலாப்பயணிகள் விசாவில் மலேசியாவுக்கு புறப்பட இருந்த இலங்கையர்கள் 11 பேர் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இவர்கள் வேலை வாய்ப்புக்காகவே போலி சுற்றுலா பயணிகள் விசாவில் மலேசியா செல்ல இருந்ததாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் குறித்த செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையின் போர்க் குற்ற காணொளிகள் இன்று மனித உரிமை பேரவையில் காண்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

இலங்கையில் படையினர் தமிழ்க்கைதிகளை கொலை செய்யும் வீடியோ காட்சி இன்று ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் காண்பிக்கப்படவுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் 17 ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்த வீடியோ காட்சி பிரித்தானிய சனல் 4 தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பானது.

இந்நிலையில் இதன் தொழில்நுட்பம் குறித்த அனைத்து உறுதிப்படுத்தல்களையும் ஐக்கிய நாடுகளின் சட்டவிரோத கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான விசேட நிபுணர் கிறிஸ்ரோவ் கெனிஸ் மேற்கொண்டுள்ளார்.

எனினும் சனல் 4 இன் காட்சிகளை இலங்கை போலியானது என்று கூறி வருகின்றது.

ஐக்கிய நாடுகளின் சட்டவிரோத கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான நிபுணராக கிறிஸ்ரோவ் கெனிஸ் 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பின்னர் அவர் மனித உரிமைகள் பேரவைக்கு சமர்ப்பிக்கும் முதலாவது அறிக்கை இதுவாகும்.

இந்தநிலையில் கடந்த 2005 ஆம் ஆண்டு சட்டவிரோத கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான முன்னாள் நிபுணர் பிலிப் அல்ஸ்ரன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

அதன்பின்னர் 2010 ஆம் ஆண்டில் அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட அவர் கடந்த வருடம் இலங்கைக்கு வருவதற்கான அனுமதியை கோரிய போதும் அக்கோரிக்கை இலங்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தனியார் ஓய்வூதிய எதிர்ப்பு போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களும் பங்கேற்பர்

## மனோகணேசன் தெரிவிப்பு



(கொழும்பு)

தனியார் ஓய்வூதிய சட்டமூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தென்னிலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் மேற்கொள்ளவுள்ள அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தற்போது மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, தனியார் ஓய்வூதிய சட்டமூலத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் என்றால் அது தோட்டத் தொழிலாளர்களே ஆவர். இதற்கு காரணம் தோட்டப் புறங்களிலுள்ள பெரும்பாலான தொழிற்சங்கங்கள் அரசுக்கு சார்பானவையாகவே இருக்கின்றன.

தோட்டப்புற மக்களின் நலன்களைக் கருத்திற் கொள்ளும் தொழிற்சங்கங்கள் அங்கு இல்லை. கடந்த காலங்களில் சுதந்திர வர்த்தக வலய தொழிற்சங்கங்கள் மற்றும் வங்கி ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கட்டுநாயக்கவில் 25 ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் வீதியை மறித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மலையகத்திலுள்ள தோட்டப் புறங்களிலுள்ள தொழிலாளர்களும் முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறான எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்க ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸும், இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியும் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக [illegible]னும் இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் சதாசிவமும் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகிறோம். அத்தோடு இன்றைய தினம் தென்னிலங்கையிலுள்ள ஏனைய தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளவுள்ளோம் என்றார். (ஸ்ரீ-2)

## தனியார் வைத்திய நிறுவன சட்டமூலம் சீர்திருத்தம்

தனியார் வைத்திய நிறுவனங்களை நிர்வகிப்பதற்கான அதிகாரங்களை சுகாதார அமைச்சுக்கு வழங்கும் வகையில் தனியார் வைத்திய நிறுவன சட்ட மூலம் சீரமைக்கப்படவுள்ளது.

அண்மையில் சுகாதார அமைச்சின் கொள்கை வகுப்பு கூட்டத்தின் போது இது தொடர்பில் சுகாதார அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தனியார் வைத்திய நிறுவனங்களை நிர்வகிக்கும் அதிகாரம் சுகாதார அமைச்சிடம் இல்லை.

இந்த நிலையில் சட்ட மூலத்தை உடனடியாக சீரமைப்பது தொடர்பில் சட்டத்தரணி கருணாதாஸ ஹெட்டி ஆராச்சி தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழு சீரமைப்பு தொடர்பிலான கருத்துக்களை ஆலோசித்து வருகிறது. (ஸ்ரீ-2)

# ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டமூலங்களை திருத்துவதற்கு அரசாங்கம் முடிவு

உத்தேச ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக தொழிற்சங்கள் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்து வரும் நிலையில் ஊழியர் சேமலாப நிதியம் (ஈ.பி.எவ்) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈ.ரி.எவ்) ஆகியவற்றுக்கான சட்டமூலங்களை திருத்துவது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டமூலங்கள் திருத்தப்படவுள்ளதாக திறைசேரிச் செயலாளர் கலாநிதி பி.பி.ஜயசந்திர கூறியுள்ளார்.

தனியார்துறைக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காகவே இச்சட்டமூலங்கள் திருத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சானது தற்போது உத்தேச ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஊழியர் சேமலாப நிதிய, ஊழியர் நம்பிக்கை நிதிய சட்டங்களின் திருத்தம் என்பவற்றிக்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

ஓய்வூதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவியாகவே இவற்றை திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த திருத்தங்களுக்கு தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

இந்த இரு நிதியங்களில் இருந்தும் பணத்தை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முயற்சிப்பதாக அவை சாடியுள்ளன. அதேவேளை உத்தேச தனியார் ஓய்வூதியத் திட்டம் குறித்து பொதுமக்கள் மத்தியில் தெரியப்படுத்துவதற்காக கையேடு ஒன்றை வழங்கவுள்ளதாக நிதித் திட்ட அமுலாக்கல் அமைச்சு கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# நேரம் சரியில்லை எனக்கருதி நாட்டை விட்டு வெளியேறிய மேர்வின்

(கொழும்பு)

தமக்கு மோசமான காலப்பகுதி நடைபெற்று வருவதாக ஜோதிடர்கள் கூறியதற்கு அமைய அமைச்சர் மேர்வின் சில்வா நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார்.

அவர் ஏற்கனவே தமக்கு ஆறு மாதங்களுக்கு நேரம் சரியில்லை என கூறி வெளி நாடு ஒன்றுக்கு சென்றிருந்தார்.

எனினும் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற சிங்கள திரைப்படம் ஒன்றில் சிங்கள மன்னனான துட்டகைமுனுவாக நடிப்பதற்கு அவர் மீண்டும் இலங்கை திரும்பியிருந்தார்.

திரைப்படம் ஒலிப்பதிவு செய்து கொண்டிருந்த போது திடீரென யானை ஒன்று தாக்க முற்பட்ட வேளையில் அவரது பாதுகாவலர் களால் மீட்கப்பட்டார்.

இந்த நிலையில் ஜோதிடர் கூறியது போல தமக்கு நேரம் சரியில்லை என கருதி இத்தாலிக்குச் சென்று அங்கு நடைபெறவிருந்த ஐ.நா.எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள திட்டமிட்டிருந்தார்.

எனினும் மேர்வின் சில்வா கலந்து கொள்வதாக இருந்தால் அந்த ஆர்ப்பாட்டத்தில் தாம் கலந்து கொள்ள மாட்டோம் என இத்தாலிய சிங்களவர்கள் எச்சரித்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளாமல் ஹோட்டல் அறையிலேயே தங்கி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



கிளிநொச்சி வலய பாடசாலைகளில் நடைபெற்ற பெருவிளையாட்டுப் போட்டிகளில் பூப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்று மாகாண மட்டப் போட்டிகளுக்கு தெரிவான கிளிநொச்சி மகா வித்தியாலய ஆண்கள் அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பெண்கள் அணியினரையும் அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர் , பயிற்றுநர், மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்சி ஆசிரியர் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

# தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்று ஆரம்பம்

(கொழும்பு)

தென்மேல் பருவப் பெயர்ச்சி காற்றுக்கான சூழ்நிலைகள் ஏற்படத் தொடங்கியுள்ளதாகவும் தென்மேற்கு பிராந்தியத்தில் மழைக் காலநிலையை சில நாட்களில் எதிர்பார்க்க முடியும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்கு, சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தளை மாவட்டங்களிலும் இடையிடையே மழையை எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேற்கு மற்றும் தெற்கு கரையோரப்பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை நிலவும்.


இதேவேளை கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் அதிகபட்சமாக கினிகத்தேனையில் 107.5 மில்லிலீற்றர் மழை பெய்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

**(79) (ஓ) குழந்தைகளுக்கான விசேட பாதுகாப்பு**

230. அவர்கள் இலகுவில் தாக்கப்படக்கூடியவர்கள் என்பதைக் கவனத்திற்கொண்டு, குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு விசேட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தேவைப்படுத்துகிறது. (ஐ.சி.சி பி.ஆர். உறுப்புரை 4 ஐ.சி.ஈ. எஸ்.சி.ஆர். உறுப்புரை 10,குழந்தைகளின் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை)



பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் இல்லாத நிலையில் தனியாகவுள்ள குழந்தைகள் விடயத்தில் இக்கடப்பாடு தீவிரத்தன்மையைப் பெறுகிறது. பிரிக்கும் இடங்களில் அல்லது ஆரம்பக்கட்டத்தில் மெனிக்பாமில் அத்தகைய விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதது மீறல் என்பதைக் குறிக்கும் நம்பகரமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மேலும் புனர்வாழ்வு என்ற சாட்டில் சரணடையும் சிறுவர்கள் வழக்கின்றி அரசாங்கத்தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்கள். அவர்கள் புனரமைப்பு மத்திகளுக்கிடையே மாற்றப்பட்டதோடு, அத்னால் அவர்கள் இருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பது மற்றும் குடும்பத்தினர் அவர்களைச் சந்திப்பது சிரமமாகவிருந்தது.

பொதுமக்கள் மீது பரவலான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(ஔ) நீதிமன்றங்களுக்கான பிரவேசத்தைஉள்ளிட்ட பயனுறு பரிகாரத்துக்கான உரிமை**

231. சர்வதேச சட்டத்தின் கீழ், வாதிடக் கூடிய மீறலைக் கொண்ட

## தமிழாக்கம் தொடர் 29

மனித உரிமைகள் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களுக்கான பயனுறு பரிகாரத்தை வழங்க அரசாங்கம் தேவைப்படுத்துகின்றது (ஐ.சி.சி. பி.ஆர். உறுப்புரை 2) உயிர்வாழ்வதற்கான உரிமை மற்றும் பௌதீகப் பாதுகாப்பு மீறல் தொடர்பான பாரதூரமான குற்றச் சாட்டுக்களைப் புலனாய்வு செய்து பொறுப்பானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதை இப்பரிகாரம் உள்ளடக்குகிறது. தடுத்துவைத்தலின் சட்டபூர்வமான தன்மையைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மற்றும் மீறல்கள் தொடர்பில் பரிகாரம் வழங்குவதற்காக நியாயமானதும் பாரபட்சமற்றதுமான நீதி மன்றங்களுக்கான பிரவேசம் பாதுகாப்புச் சட்டத்தின் அடித்தளமாக அமைகிறது. (ஐ.சி.சி.பி.ஆர். உறுப்புரைகள் 2, 9, 14, மற்றும் 26) இக்கடப்பாடு அத்தியாயத்தில் மேலும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

232.யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின் போதான குற்றம் சாட்டப்பட்டமீறல்களில் ஒருசில மாத்திரமே புலனாய்வு செய்யப்பட்டு, அத்தோடு அப்படி மேற்கொள்ளப்பட்டவையும் சுவதேச பயனுறுதித்தன்மை மற்றும் சுயாதீனம் பற்றிய சட்டனைகளை நிறைவு செய்யாது என்பதல்இவ்வேறு பாடுகளும் மீறப்பட்டுள்ளதாக நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வது மிகவும் கட்டுப்படுத்தப்பட்டு அல்லது சட்டத்தினால் நிறுத்தப்பட்டு, மற்றும் பழக்கத்தினால் சுருக்கப்பட்டுள்ளது.

அவசரகால சட்டங்கள் மற்றும் ஒழுக்கவிதிகளின் கீழ் தமது உத்தியோக அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அரச ஊழியர்கள் தொடர்பில் எவரும் நீதிமன்றம் செல்வதற்கு வாய்ப்பே இல்லை. இவ்வதிகாரங்களின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில் தடுத்து வைப்பதற்கான பிரத்தியேகமான நியாயப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு மிகக்குறைந்த அதிகாரமே உள்ளது.

**5. யுத்த வலயத்துக்கு வெளியே மனித உரிமைகள் மீறல்கள்**

**(அ) காணாமல் போதல் மீதானதடை**

233. அரசதரப்பொன்றினுள் காணாமல் போதல்களை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் தடை செய்கிறது. காணாமல் போதல் ஒருவன் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு எதிரான ஒரு மீறலாக உள்ளது (ஐ.சி.சி. பி.ஆர். உறுப்புரை 9)

234. அரசாங்க முகவர்கள் அரசாங்கத்தின் சார்பில் நடாத்திய காணாமல் போதல்கள், யுத்தத்தின் கடைசிக் கட்டங்களுக்கு முன்பும், அப்போதும் மற்றும் அதற்குப்பின் னரும் இலங்கையில் பரவலாகக் காணப்பட்டதொரு நடவடிக்கை என்பதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அநேக சந்தர்பங்களில் இப்படித் தாக்கமடைந்தோர், சந்தேகிக்கப்பட்ட எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள்,சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் அல்லது மனித உரிமைகள் காப்பாளர்களாவர். சிலர் பிரித்தெடுக்கும் செயற்பாட்டிற் காணாமல் போனார்கள். இத்தகையவர்கள் கடத்தப்பட்டு வெள்ளை வான்களில் எடுத்துச் செல்லப்பட்டபின் அவர்களைக் காணவேயில்லை என்ற பொதுவானதொரு வழக்கத்தை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் விபரிக்கின்றன.

**(81) (ஆ) கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம்**

235. தகவலை வெளியிடுவதற்கும் அதனைப் பெறுவதற்கும் மற்றும் கருத்தொன்றைக் கொண்டிருக்கவும் கருத்துக்களை வெளியிடுவதற்குமான சுதந்திரத்தை சர்வதேச மனித உரிமைகள் சட்டம் பாதுகாக்கின்றது. (ஐ.சி.சி. பி.ஆர். உறுப்புரை 19). சட்டத்துக்கிணங்க மற்றும் ஏனையோர் உரிமை அல்லது நற்பெயரை அல்லது தேசிய பாதுகாப்பை அல்லது பொது அமைதியை, பொதுமக்கள் சுகாதாரத்தை அல்லது நல்லொழுக்கத்தைப் பாதுகாக்க மாத்திரம் இவ்வுரிமைகள் மட்டுப்படுத்தப்படலாம். சரிசம விகித அளவின் பரிசீலனையை எந்த மட்டுப்படுத்தலும் திருப்திப்படுத்த வேண்டும்.

236. சுயாதீன ஊடகவியலாளர்கள் யுத்தப் பிரதேசத்திற்குச் செல்வதை முழுமையாகத் தடைசெய்வது, ஏதும் பொதுமக்கள் பாதுகாப்பு நோக்கங்களை விஞ்சியதாக இருப்பதால் இவ்வேறுபாட்டினை மீறியதற்கான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

2008இல் விதிக்கப்பட்ட ஊடக வழிகாட்டல்கள் யுத்தம்பற்றி அறிக்கை விடுப்பதைக் கடுமையாக மட்டுப்படுத்தியதோடு, ஊடகச் சுதந்திரத்தையும் பாதித்தது.

அரசாங்கத்தின் கருத்துக்கு மாறான கருத்துக்களை வெளியிடமுனைந்த ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் பலவிதமான அச்சுறுத்தல்களை எதிர் கொண்டதோடு சிலர் கொல்லப்பட்டோ, காணாமல் போய் அல்லது கடுமையாகத் தாக்கப்பட்டது தொடர்பான நம்பகமான குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

**(உ) தமிழீழ விடுதலைப்புலிகளின் குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்கள்**

**1. பொதுமக்களை, தாக்குதலைத் தடுக்கும் பொறியாகப் பாவித்தல்**


237. ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: ஆயிரக்கணக்கான பொதுமக்களை, அனேகமாகக் கொலை அச்சுறுத்தலை விடுத்து, யுத்தத்தின் கடைசிக் கட்டங்களின் போது தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தொடர்ந்து இருக்குமாறு கட்டாயப் படுத்தி அப்பிரதேசத்திலிருந்து தப்பிச் செல்ல முனைந்தவர்களைச் சுட்டுக் கொலை செய்து இக்கட்டுப்பாட்டை அமுல் செய்ததன் மூலம் பணயக் கைதிகளைப் பிடிப்பதை தடை செய்யும் பொதுஉறுப்புரை 3இனை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் எடுத்துக் காட்டுகின்றன. எல்.ரி.ரி.ஈ. பொதுமக்களை யுத்த வலயத்திலிருந்து செல்ல அனுமதிக்காதது பற்றிய நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, அத்தகைய யுத்தக்குற்றம் பற்றிய சம்பிரதாய விளக்கம் தேவைப்படுத்துவதற்கேற்ப இராணுவ இலக்குகளைத் தாக்குவதை விட்டும், அவர்களைப் பாதுகாப்பதற்காக எல்.ரி.ரி.ஈ. பொதுமக்களை அங்கு செலுத்தியதற்கான நம்பகமான சாட்சிகள் கிடைக்காததால், அந்நடவடிக்கை சட்டத்தின் பிரகாரம் பொதுமக்களைத் தாக்குதலைத் தடுப்பதற்கான பொறியாகப் பாவித்ததாகாது எனக்குழு நம்புகிறது (விதி 97, ஐ.சி. ஆர்.சி. ஆய்வு)

**உ. எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டி லிருந்து தப்பமுயன்ற பொதுமக் களைக் கொலை செய்தல்**

238. ஜெனீவா உடன்படிக்கைகளின் பொது உறுப்புரை 3: குறிப்பாக இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்தசூனிய வலயங்களில், எல்.ரி.ரி.ஈ.இன் பக்கத்தில் யுத்த முனைகளில் வலுக்கட்டாயமாகப் பொதுமக்கள் சனத்தொகையைப் பேணும் முயற்சியாக, யுத்தவலயத்திலிருந்து தப்புவதற்கு முயன்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட பொதுமக்களை எல்.ரி.ரி.ஈ. வேண்டு மென்றே சுட்டுக் கொலைசெய்தது பொது உறுப்புரை 3 (கொலை) இனை மீறியதை நம்பகமான குற்றச்சாட்டுக்கள் குறிப்பிடுகின்றன.


**82) 3. பொதுமக்களுக்கு அருகில் இருந்து இராணுவத் தளபாடங்களைப்பாவித்தல்**


239.சனநெருக்கடியுள்ள பகுதிகளுக்கு அருகில் இராணுவ இலக்குகளை அமைத்தல்: சாத்தியமாயின் சனநெருக்கடியுள்ள பொதுமக்கள் பிரதேசங்களில் இராணுவ இலக்குகளை அமைத்தலை சர்வதேச மனிதாபிமான சட்டம் தடைசெய்கிறது. (விதி 23 24 ஐ.சி.ஆர்.சி. ஆய்வு ) மோட்டர் செலுத்திகள்,



ஏனைய கனமற்ற பீரங்கிகள், இராணுவ வாகனங்கள், மோட்டர் குழிகள், பதுங்குகுழிகள் மற்றும் அகழிகள் ஆகியவற்றை எல்.ரி.ரி.ஈ. வேண்டுமென்றே பொதுமக்கள் பிரதேசங்களுக்கு அருகில் அமைக்கும்அல்லது பிரயோகிக்கும் போக்கினால் இந்த ஏற்பாட்டினை மீறுவதை நம்பகமான குற்றச்சாட்டுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஆஸ்பத்திரிகள் மற்றும் யுத்தசூன்ய வலயத்தை உள்ளிட்ட இடம் பெயர்ந்தோர் கூடியிருக்கும் இடங்களை இவ்வமைவிடங்கள் உள்ளடக்கின. பிரித்தறிவது மற்றும் விதிகளை மதிப்பதை உறுதிப்படுத்துவதற்காக மேலே குறிப்பிட்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு இயைபாக இலங்கை இராணுவம் நடப்பதிலிருந்து அவர்கள் பொறுப்பை இச்சட்டவிரோத நடவடிக்கைகள் நீக்காது.

*(தொடரும்)*





ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 11 முன்பள்ளிகளுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் அத்தியாவசிய உப கரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கற்றல் உபகரணங்களை வழங்குவதையும் அருகில் சொண்ட் நிறுவன திட்ட உத்தியோகத்தர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# வடக்கு,கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்த ஜே.வி.பி. முயற்சி

## அரசு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு ஜே.வி.பி. முயற்சித்து வருவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. குறிப்பாக வன்னியின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்களை ஜே.வி.பி. மேற்கொண்டு வருவதாக சிரேஷ்ட அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.**

கடந்த 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஜே.வி.பி. அடைந்த தோல்வியை மூடிமறைக்கும் நோக்கில் இவ்வாறு வன்னியில் குழப்பங்களை ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டிலும் வன்னியிலும் ஜே.வி.பி.யினர் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லாதொழித்திருக்காவிட்டால் ஒரு சுவரொட்டியைக் கூட வன்னியில் ஒட்டியிருக்க முடியாது என்பதனை துரதிர்ஷ்டவசமாக மறந்து செயற்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலி குடும்பங்களைப் பயன்படுத்தி தமது பிரசாரங்களை முன்னெடுக்க ஜே.வி.பி. முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். எனினும் ஜே.வி.பி.யின் இந்த பொறியில் வடக்கு – கிழக்கு மக்கள் சிக்கமாட்டார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தை விமர்சனம் செய்யும் தரப்பினர் யதார்த்ததை புரிந்து கொள்ளாமல் செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படாவிட்டால் ஜே.வி.பி.யோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ சுதந்திரமாக அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் அமரர் கலாநிதி சோமசுந்தரம் கிருஷ்ணராஜாவின் நினைவுப் பேருரை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட முன்னாள் பீடாதிபதி கலாநிதி சி.மௌனகுரு பேருரை வழங்கவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

# புதிய விசா நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

நாட்டிற்குள் வந்த பின்னர் சுற்றுலா விசா அனுமதி பெறும் நடைமுறையை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் இலங்கை மீளப் பெறப் போவதாக அறிவித்துள்ளது.

புதிய விசா நடைமுறைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே இந்த புதிய விசா நடைமுறைக்கான அனுமதி வழங்கப்பட்டது. எனினும் குறித்த நடைமுறை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு பின்னரே நடைமுறைப்படுத்தப்படும் எனஅரசாங்க உயர் மட்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பரஸ்பர இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவு அடிப்படையிலேயே சிங்கப்பூர் மற்றும் மாலைதீவு நாடுகளின் பிரஜைகளுக்கு இந்த வரப்பிரசாதம் வழங்கப்பட்டிருந்தது.

அதேபோன்று இலங்கையர்களுக்கும் குறித்த நாடுகளின் அரசுகள் விசா நடைமுறைகளை தளர்த்தியிருந்தன. எனினும் கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தின் போது முன்னைய விசா அனுமதிக்கு பதிலான இணையத்தளத்தின் ஊடாக விசா அனுமதிக்க விண்ணப்பிக்கக்கூடிய நடைமுறையை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் நோக்கிலேயே நாட்டிற்குள் வந்த பின்னர் விசா அனுமதிக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை அமுல்படுத்தப்படிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# யாழ்தேவி காங்கேசன்துறை வர இன்னும் இரண்டு வருடங்கள் தேவை

## போக்குவரத்து அமைச்சர் உறுதி

(வவுனியா)

வடமாகாணத்திற்காக யாழ்தேவி ரயில் அடுத்த இரண்டு வருடங்களுக்குள் காங்கேசன்துறையை வந்தடையும் என போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டம் இந்திய அரசின் கடனுதவியுடன் நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

சிங்கர் நிறுவன அனுசரணையிவ் அமைக்கப்பட்ட ஓமந்தை புகையிரத நிலைய திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டிலுள்ள புகையிரத பாதைகள் அனைத்தையும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியுள்ளது. இதன் மூலம் புகையிரத பாதையின் வேத்தை அதிகரித்து குறைந்த நேரத்திற்குள் பயணத்தை நிறைவு செய்ய முடியும்.

புகையிரத சேவையை வினைத்திறனுள்ளதாக மாற்றுவதற்கு புகையிரத திணைக்கள ஊழியர்கள் அனைவரும் ஒன்றிணைத்து பாடுபட வேண்டும். கம்பனித்துறை சமூக பொறுப்புடமை திட்டத்தின் கீழ் சிங்கர் நிறுவனத்தை போன்று ஏனைய தனியார் நிறுவனங்களும் நாட்டில் அபிவிருத்தியை மேற்கொள்ள அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும்.

ஓமந்தை புகையிரத நிலையம் மற்றும் தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரையான புகையிரத பாதை புனர்நிர்மாணம் ஆகியவற்றிக்காக சிங்கர் நிறுவனம் 10 மில்லியன் ரூபா நிதியுதவியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தாண்டிக்குளம் வரை இடம்பெற்று வந்த வடமாகாணத்திற்கான யாழ்தேவி ரயில் சேவை கடந்த வெள்ளிக்கிழமை ஓமந்தை வரை உத்தியோகபூர்வமாக நீடிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம, போக்குவரத்து பிரதியமைச்சர் ரோகன திஸாநாயக்க, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எம்.எஸ். சாள்ஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச-5)

# நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பான் கீ மூனே தீர்மானிக்க வேண்டும்

## ஐ.நா.பொதுச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் அதன் பொதுச் செயலாளர் பான் கீ மூனே தீர்மானிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்துள்ளது.

இலங்கை யுத்தம் தொடர்பிலான விசாரணைப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென நிபுணர்குழு பான் கீ மூனுக்கு பரிந்துரை செய்துள்ளது.

எனினும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை மற்றும் பொதுச் சபையின் இணக்கப்பாடின்றி இவ்வாறான ஓர் பொறிமுறையை ஏற்படுத்த முடியாது என பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.


எனினும் இந்த விடயம் குறித்து பான் கீ மூனே தீர்மானிக்க வேண்டும் என பொதுச் சபையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். இன்னர் சிற்றி பிரஸ் ஊடகத்திற்கு அளித்த செவ்வியின் போது பொதுச் சபையின் தலைவர் ஜோசப் டைஸ் இதனைத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் எழுச்சி மாநாடு

(யாழ்ப்பாணம்)

உலகளாவிய இந்து சமயத் துறவி வேந்தர் சுவாமி விவேகானந்தரின் எழுச்சி மாநாடு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அதிபரின் சிறப்புரையை அடுத்து க.பொ.த சாதாரண தரத்தில் பயிலும் 425 மாணவர்களுக்கு **எழுமின், விழுமின் குறிசாரும் வரை நில்லாது சொல்மின்** காண்காட்சி இடம்பெறுமென பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம செயலாளர் அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)





நவாலி மதியொளி பாலர் பாடசாலையினால் அமரர் செல்வராசா பிரதீஸ் ஞாபகார்த்தமாக கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் மரதன் ஓட்டப்போட்டி ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றிய வீரர்களை படங்களில் காணலாம்.

(படங்கள்: நவாலி செய்தியாளர்)

# இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜெயலலிதாவுக்கு அரசு அழைப்பு?

(கொழும்பு)

வடக்கின் தமிழ் மக்களை நேரில் சந்தித்துக் கலந்துரையாட இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு அரசாங்கம் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு அழைப்பொன்றை விடுப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

வடக்கில் யுத்தம் நிலவிய பிரதேசங்களில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டு அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைக் கேட்டறியவும் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

அதன் மூலம் இலங்கை அரசாங்கம் தொடர்பான ஜெயலலிதாவின் எதிர்ப்புணர்வுகளைத் தணிப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் தமிழ்நாடு மாநிலத்தில் இலங்கை அரசாங்கம் தொடர்பான எதிர்ப்புணர்வுகளைத் தணிப்பதற்கும் அங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திரும்பவும் நாட்டுக்கு வரவழைப்பதற்கும் அரசாங்கம் தமிழ்நாடு அரசாங்கத்தின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்ளவும் உத்தேசித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஶ்ரீ-2)

## ஐ.நா. மனித உரிமை பேரவையில்

# நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் கலந்துரையாடப்படமாட்டாது?

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் பேசப்பட மாட்டாது என இராஜதந்திர தகவல்கள் தெரிவிக்கின்றன

ஜெனிவாவில் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவினர் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்வார்கள்.

அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா, சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த அமர்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென நிபுணர் குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் அமைப்பில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஏற்கனவே சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வுகள் வரையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முயற்சி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டு ரீதியான விசாரணைகளுக்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்திருந்த கோரிக்கையைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-2)

# மாதர் சங்க உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியுடன் சுயதொழில் கடனுதவி

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பரமன்கிராய் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மாதர் கிராம முன்னேற்ற சங்கத்தினர் தமது சங்க சொந்த நிதியிலுள்ள சேமிப்புப் பணத்திலிருந்து ஏனைய மாதர் சங்கங்களுக்கு முன்மாதிரியாக தமது சங்கத்தின் 22 உறுப்பினர்களுக்கு குறைந்த வட்டியோடு சுய தொழில் கடனாக தலா 10ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளனர்.

இந்நிகழ்வு பரமன் கிராய் முன் பள்ளி மண்டபத்தில் பூநகரிப் பகுதி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தரணிதரன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இப்பகுதி கிராம சேவை அலுவலர் தி.சுப்பிரமணியம் கலந்து கொண்டு உரையாற்றுகையில், சுயதொழிலுக்காக இக் கடனை குறைந்த வட்டியில் உங்கள் சங்கமே உங்களுக்கு வழங்குகிறது. இது ஒரு முன்மாதிரியான நிகழ்வாகும்.

கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிய காலத்தில் உங்கள் கடனைச் செலுத்துவதன் மூலம் மேலும் ஒரு பகுதி அங்கத்தவர்களுக்கு கடனை வழங்கி அவர்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என்றார். (ஶ்ரீ-84)

# 2011.05 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1431-நூறாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை (19 வயது) ஜோன் ஒஃப் ஆர்க் ரோவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தினால் உயிருடன் தீ வைக்கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டாள்.

★ 1539-தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெனாண்டோ டி. சோட்டோ 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.

★ 1635-முப்பதாண்டுப் போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1815-இலங்கையிலிருந்து காயப்பட்ட போர்வீரர்களை ஏற்றி வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1845-திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.

★ 1883-நியூயோர்க் நகரில் புரூக்ளின் பாலம் இடிந்து விழப் போவதாக எழுந்த வதந்தியை அடுத்து இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 12 பேர் இறந்தனர்.

★ 1913-முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு 1913 எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: 1000 பிரித்தானிய போர் விமானங்கள் ஜேர்மனியின் கொலோன் நகரில் 90 நிமிடங்கள் குண்டு மழை பொழிந்தன.

★ 1966-முன்னாள் கொங்கோ பிரதமர் எவரீஸ் டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாக தூக்கிலிடப்பட்டார்கள்.

★ 1971-செவ்வாய்க் கோளின் 70 சதவீத பகுதியை படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★ 1972-இஸ்ரேலின் விமானநிலையத்தில் ஜப்பானிய செம்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 24 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1981-வங்காளதேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது ஜனாதிபதி சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1987-கோவா தனி மாநிலமாகியது.

★ 1998-வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.6 றிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

## பிறப்புக்கள்

★ 1899-மணிக்கொடி சீனிவாசன், தமிழ்,ஆங்கிலப் பத்திரிகையாளர் (இ.1975)

★ 1931-சுந்தரராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர் (இ.2005)

★ 1934-அலெக்சி லியோனொவ், சோவியத் ரஷ்யாவின் விண்வெளி வீரர்


## இறப்புக்கள்

★ 1431-ஜோன் ஆஃப் ஆர்க், பிரெஞ்சு வீராங்கனை (பி.1412)

★ 1960-போரிஸ் பாஸ்ரர்நாக், ரஷ்ய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1890)

★ 1981-சியாவுர் ரகுமான், பங்களாதேஷ் ஜனாதிபதி (பி.1936)

# கொஞ்சம் அமுதம் கொஞ்சம்விஷம்



## ஆன்மீகம் 09

"நான் ஓர் அரவாணி. பெற்றோர்களாலேயே நிராகரிக்கப்பட்டேன். சமுகத்தால் ஒதுக்கப்பட்ட இனத்தில் ஓர் அங்கமாகி வேதனையுடன் வாழ்கிறேன்.கடவுள் என்னை ஏன் இப்படிப் படைத்தார்?"

பெண்ணின் கருப்பை, மனித உடல்களைத் தயாரிக்கும் அற்புதமான அதிசயமான தொழிற்சாலை!

பரவலான கருத்து நிலவுவது போல், அங்கே தெய்வம் உட்கார்ந்து ஒவ்வொரு உயிராகப் படைத்து வெளியே அனுப்பிக்கொண்டு இருப்பதில்லை. அடிப்படைச் சக்தியாக இருக்கும் உயிர்த்தன்மையே அந்தத் தயாரிப்புவேலையை கவனித்துக் கொள்கிறது. அது புரிந்துகொள்ளக் கடினமான மிகச் சிக்கலான தொழிற்சாலை!

எந்த தொழிற்சாலையிலும் தயாரிப்பில் சில கோளாறுகள் நிகழ்வது உண்டு. கருப்பைத் தொழிற்சாலையிலும் சில சமயம் தவறுகள் நிகழ்வதுண்டு. எத்தனையோ உயிர்கள், பார்வைக்கோளாறு, கேட்கும் திறன் இன்மை, வளர்ச்சியுறாத மூளை என நம்மிலிருந்து வித்தியாசப்பட்டிருப்பதை அன்றாடம் சந்திக்கின்றோம். ஒற்றைக்கையுடன் ஜனிக்கும் குழந்தை, தலைகள் ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் போன்ற தீவிரத் தவறுகள் படைப்பில் நிகழ்ந்தால் உடனே அதைப் பெரிதுபடுத்துகிறோம். இவற்றை குறைபாடுகள் என்று பார்க்காமல் மாறுபாடுகள் என்று பார்க்கும் பக்குவம் இங்கே வரவில்லை.

உங்களை போன்ற அரவாணிகளுக்கு மட்டும்தான் வேதனையான நிலை என்பதில்லை. நம்மிலிருந்து மாறுபட்ட தோற்றத்துடன் எது இருந்தாலும் அதை தாழ்திப் பார்ப்பது நம் பழக்கமாகிவிட்டது. சரும நிறம் மாறினாலே சமூகம் சமமாகப் பார்க்க தயாராக இல்லையே!

பலநூறு ஆண்டுகளாக மாறுபட்ட இனத்தினரை தாழ்த்தி சித்திரவதைக்கு உள்ளாக்கி அடிமைகளாக நடத்துவது இந்தப் பூமியில் நடந்தேறி இருக்கிறது.நாகரீகம் வளர்ந்துவிட்டதாக பறைசாற்றிக் கொள்ளும் இன்றைய தினத்திலும் உலகெங்கும் இந்த வேறுபாடுகள் களையப்படாமல் கொழுந்துவிட்டு எரிவதை நீங்கள் கவனித்து இருக்கலாம்.

மூன்று தலைகளுடன் கடவுள் இருப்பதாக சொன்னால் மண்டியிட்டு வழிபடத் தயாராக இருப்பவர்கள் இரண்டு தலைகளுடன் மனிதஉயிர் வந்தால் .அதை மேம்பட்ட தோற்றமாகப் பார்க்கத் தயாராக இல்லை. கல்லெறிந்து காயப்படுத்தவே முனைகிறார்கள்.

உடல் தோற்றம் என்பது ஒருவித வெளிப்பாடுதான். உள்ளிருக்கும் உயிர்த்தன்மையில் எந்த மாற்றமும் இல்லை. தங்களின் உயிர்த்தன்மையை உணர்ந்துகெள்ளாதவர்கள்தான் குறைபாடு உடையவர்கள். இதைப் புரிந்துகொண்ட பக்குவத்துடன் சமூகம் இயங்கினாலே போதும்... எல்லாம் திருந்தி விடும்!

**"நான் என்ன பாவம் செய்தேன்? எனக்குமட்டும் ஏன் இந்தத் தண்டனை?"**

உங்களுக்கு நேராமல் இது உங்கள் சகோதரனுக்கோ அல்லது பக்கத்து வீட்டுக்காரருக்கோ நேர்ந்திருந்தால் மகிழ்ச்சியாக இருப்பீர்களா?

வாழ்க்கையை அந்தக்கோணத்தில பார்ப்பது தவறு.

வேறு ஒருவருடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இங்கு யார்தான் குறைபாடு இல்லாதவர்? ஓணானைப்போல விழிகளை உருட்டி பின்னால் இருப்பதை கவனிக்க முடியாதவர்களை பார்வையில் குறையுள்ளவர்கள் என்று முத்திரை குத்தலாமா? எறும்பைப்போல தலைகீழாக நடக்கத் தெரியாதவர்களுக்கு கால்கள் ஊனமென்று தீர்ப்பு எழுதலாமா?

சங்கரன்பிள்ளை ஒரு நேர்முகத்தேர்வுக்குப் போயிருந்தார்.

"உன் பிறந்த நாளைக் குறிப்பிடவில்லையே?"என்று அங்கே கேட்டார்கள்.

செப்ரெம்பர்மாதம் 10 ஆம் திகதி என்றார் சங்கரன்பிள்ளை.

"எந்த வருடம்?"

"அட ஒவ்வொரு வருடமும்தான்!" என்றார் சங்கரன்பிள்ளை.

இப்படிப்பட்டவர்கள் இருக்கும் உலகத்தில் ஜன்ஸ்டீனைப்போல் சிந்திக்கத் தெரியாதவர்

## உங்களைத் தாழ்த்திக்கொள்ளாதீர்கள்

கள் எல்லோரையும் மூளையில் குறைபாடுடையவர்களாக அறிவிக்கலாமா? இங்கே அனைவரும் ஒற்றைக்காலுடன் பிறந்திருந்தால் எந்த வருத்தமும் இல்லாமல் சந்தோசமாக நொண்டியடித்துக் கொண் டிருப்போம். வேறு ஒருவருக்கு இரண்டு கால்கள் இருப்பதுதான் நம் வேதனைக்கு அடிப்படை

உங்களுக்கு நேர்ந்தது ஒரு இயந்திரக் கோளாறுதான். இது தாவரங்களில் நேர்ந்திருக்கிறது. மிருக இனத்தில் நேர்ந்திருக்கிறது. யாருக்கு வே ண்டுமானாலும் இது நேரலாம். இதைப் பாவம் என்றோ , சாபம் என்றோ, தண்டனை என்றோ பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

**"சற்குரு என் மனவேதனையில் இருந்து மீள என்னதான் வழி?"**

உடலில் வேறுப்பட்டிருப்பதால் மட்டுமே உங்களைத் தாழ்த்திக்கொள்ளத் தேவையில்லை. இங்கு எதற்கும் உத்தரவாதம் இல்லை. எல்லா உறுப்புகளும் மிகச்சரியாக அமைந்த ஒருவருக்கு நாளை காலையிலேயே பாரிசவாயு தாக்கலாம்; உறுப் புகள் இயங்காமல் போகலாம் யார் கண்டது?

மனித அகங்காரம் அடிப்படையில் ஆணா, பெண்ணா என்பதில் தன் வேர்களை ஊன்றி இருப்பதால்தான் இது இவ்வளவு தூரம் வலி ஏற்படுத்துகிறது.

உண்மையான ஆன்மீகம் இனப்பிரிவை பெரிதாக மதிப்பதில்லை. ஆணா பெண்ணா என்பதில் கவனம் இருந்தால், உடலோடு அடையாளப்படுத்திப் பார்க்கும் ஆபத்து நேர்ந்துவிடும். அதைத்தாண்டி இயங்கும் உயிர்த்தன்மையை உணர்ந்து கொள்ளும் அனுபவம் நேராமலேயே போய்விடும்.

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் ஏதோ ஒரு தனித்தன்மையுடன் விளங்க வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் போராடுகிறார்கள். உங்களுக்குத் தானகவே ஒரு தனித்தன்மை கிடைத்திருப்பதாக இந்த நிலையை ஆரோக்கியமான மனநிலையுடன் ஏற்றுக்கொள்ளுங்கள். மற்றையபடி உங்களுக்கும் எனக்கும் அடிப்படை உயிர்த்தன்மையில் எந்த வித்தியாசமும் இல்லை. என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். வீண் வேதனையை விட்டெறியுங்கள். உங்கள் உள் சூழ்நிலையை ஆனந்தமாக வைத்துக் கொள்வதில் கவனமாக இருங்கள்.

அமுதம் நிரம்பியிருக்கும் பாத்திரம் நீங்கள். பாத்திரம் கொஞ்சம் நசுங்கியிருப்பதால் உள்ளே இருப்பது விஷம் என்று ஆகிவிடுமோ என்ன?

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# சமுதாய உணர்வுகளை தட்டி எழுப்பிய பெண் எழுத்தாளர்கள்

**01**

பெண்களின் எழுத்துக்கள் பல சமுதாய மாற்றங்களுக்கு வழிகாட்டியிருக்கின்றன என்பதை பல சரித்திரங்களின் மூலம்தெரிந்து கொள்ளலாம். தமிழ்ப் பெண் எழுத்து மரபை நோக்கினால் சங்ககாலத்திலிருந்து பெண்கள் எழுத்துத் துறையில் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியும். இவர்களில்பலர் அவர்கள் வாழ்ந்த காலகட்டத்திலிருந்து ஆண் படைப்பாளிகள் மாதிரியே தங்கள் எழுத்துக்களை வரைந்தார்கள். இவர்களின் படைப்புக்களில் வீரம் பற்றியவை மிகமுக்கியமானவை. அந்த வீரத்தின்மூலம் படைகளைக் கொண்டு நடத்தி ஒரு அரசதானியை நடத்தி அந்த அரசதானியில் பலருக்கு வேலை கொடுக்கும் ஸ்தாபனமாகப் போர் இடம்பெற்றிருந்தது. அரசனுக்காகப் போராடுதல் கெளரவமாகவும் சிலவேளை கட்டாயமாகவும் இருந்திருக்க வேண்டும். அத்துடன் அரசனைப் புகழ்ந்து பாடுதல் கடவுளைப் புகழ்ந்து பாடுதல் போன்றவையே பெரும்பான்மையான அக்காலப் பெண்களின் படைப்புகளாக இருந்தன.

மேற்கத்தேய பெண் எழுத்தாளர்களும் கிட்டத்தட்ட அதே பாணியில் எழுதினார்கள் என்பதற்கு சில சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன. கி.மு. 570 லெஸ்போ என்ற கிரேக்கத்தீவில் வாழ்ந்த சாப்போ என்ற பெண் எழுத்தாளி தன் எழுத்துக்களை காதல் உணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்படுத்தினார் என்று சொல்லப்படுகிறது.

ஜேன் ஆஸ்டின் (1775-1817) என்ற பிரித்தானிய இலக்கியவாதி அக்காலகட்டத்தில் ஆண்களின் உடமையாகப் பெண்களின் நிலையிருந்ததை எழுதினார்.

ஆனால் கடந்த 2000 வருடங்களாக பல மாற்றங்கள் தொடர்கின்றன.

> **"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

அந்த மாற்றங்களால் பெண்களின் குடும்ப, அரசியல்,கல்வி, இலக்கியம் போன்ற விடயங்களில் பல மாற்றங்கள்தொடர்கின்றன.

ஆதிகாலத்தில் பெண்களும் ஆண்களும் உழைப்புரீதியாக ஒன்றுபட்டு வேலைசெய்து தங்கள் குடும்பத்தையும் சமுதாயத்தையும் பராமரித்தார்கள். அக்காலகட்டத்தில் பெண்ணடிமைத்தனத்தின் அறிகுறிகள் இருக்கவில்லை. ஆனால் விவசாய வளர்ச்சி, நிலவுடமைஅதிகாரம் என்பன ஆண்களுக்குப் பொருளாதார பலத்தை கூட்டியதுடன் அவர்களால் வரைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட சமுதாய அடக்குமுறைகளுக்கு சமயங்களின் தோற்றங்களும் வளர்ச்சியும் உதவி செய்தன.

சமுதாயத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க பல சமயம் சார்ந்த கட்டுப்பாடுகளைத் தோற்றுவித்தார்கள். கடவுள் படைப்பில் பெண்கள் ஆண்களுக்கு சமமற்றவர்கள் என்ற தத்துவம் சமயரீதியாக முக்கிய நிலைகளிலிருந்த ஆண்களால் பரப்பப்பட்டது.

ஆனால் 18ஆம் நூற்றாண்டுக்குப்பின் தொடரும் விஞ்ஞான வளர்ச்சி, பெண்கள் கல்விவளர்ச்சி, தொழில் வாய்ப்புக்கள், அரசியல் சூழ்நிலைகள், சமுதாய விழிப்புணர்வுகள் என்பன பெண்களின் எழுத்தில் பல பரிமாணங்களைக் காட்டுகின்றன.

அமெரிக்க சுதந்திரப்போராட்டம் (1777-1783) பிரான்சுப்புரட்சி(1789-1799) அமெரிக்க உள்நாட்டு யுத்தம் (1861-1865) இரஷியப்புரட்சி -(1914) முதலாவது உலகமகாயுத்தம்(1914-1918) அயர்லாந்து சுதந்திரப் போராட்டம் (1919-1921) இரண்டாவது உலகமகாயுத்தம்(1939-1945) இந்தியாபோன்ற நாடுகளில் தொடங்கிய விடுதலைப்போராட்டங்கள்( கடந்த நூற்றாண்டின் முற்பகுதிகள்) பெண்களுக்கான புதிய சமுதாய உணர்வுகளை தோற்றுவித்தன.

அத்துடன் அண்மைக்காலங்களில் நடைபெற்ற மாணவர் போராட்டங்கள் (1960தொடக்கம்) என்பன சமுதாய, அரசியல் சார்பான பனமுக மாற்றங்களை உண்டாக்கிய சம்பவங்களாகும். இந்தமாற்றங்களுக்கும் அவற்றை உண்டாக்கும் காரணிகளாக இருக்கும் சமுதாய, அரசியல், பொருளாதார விழிப் புணர்வுகளுக்கும் பெண்களின் ஈடுபாடுகளும் கணிசமான வீதத்தில் இருந்தன.

இன்று இலங்கைப்பெண்களின் எழுத்துக்களை எடுத்துக்கொண்டால் கடந்த 30 வருடங்களாக அவர்கள் முகம்கொடுத்த துன்பங்களைப் பற்றிய எழுத்துக்கள் பரவலாக வரவில்லை.

(தொடரும்)

**இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**
**இங்கிலாந்து**

# யுத்தம் நிறைவுற்ற போதிலும் அனைத்து இன சமூகங்களையும் ஐக்கியப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை



## ஐ. தே. க. பிரதித்தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அனைத்து இன சமூகங்களை ஐக்கியப்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை என ஐக்கிய தேசியக்கட்சியின் இணைப்பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.**

கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நாட்டு மக்களை ஐக்கியப்படுத்துவதற்கு சிறந்த சந்தர்ப்பம் கிடைத்த போதிலும் அந்த சந்தர்ப்பம் கைநழுவி போயுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கம் மற்றும் எதிர்க்கட்சிகளை அடக்குமுறைக்கு உட்படுத்துவதனால் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார். வடக்கு-கிழக்கு மக்களுக்கு அரசாங்கம் இன்னமும் நன்மைகளை வழங்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


தமிழகத்தில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் உரிமைகளும் சலுகைகளும் வடக்கு-கிழக்கு மக்களுக்கு கிடைக்கப்பெறவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.அரசாங்கம் எதிர்க்கட்சிகளை உதாசீனம் செய்து வருவதாகவும் இதனால் தேசிய பிரச்சனைகளுக்கு காத்திரமான தீர்வு பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் தமிழ் மக்கள் அழுத்தங்களுக்கு உட்பட்டதாகவும் அவர்களுக்கு அரசாங்கம் நலத்திட்டங்களை வழங்க வேண்டும் எனவும் மேற்குலக நாடுகளின் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் பொது மக்கள் பணத்தை விரயமாக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது. தமிழகத்தில் மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் ஏன் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட முடியாது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அனைத்து இன சமூகங்களும் ஒற்றுமையாக வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுப்பதற்கு முன்னர் அரசாங்கமாகவே உரிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச்சட்ட மூலம் நாட்டில் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். திருத்தச்சட்டமூலத்தின் பல சரத்துக்கள் அமுல்படுத்தப் படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதிகாரப்பகிர்வு கீழ்மட்ட நிலையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறு எனினும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது சிக்கலை தோற்றுவிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். பொலிஸார் அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்தக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அனுசரணையுடன் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள சிந்தாமணி பிள்ளையார் கலாசார அன்னதான மண்டபத்தில் ஏ-9 பாதை வழியாக வவுனியா ஊடாகப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் நலன்கருதி தேநீர்,கோப்பி என்பவைகளை தயாரித்து பெற்றுக் கொள்ளக்கூடிய இயந்திரமொன்றை வவுனியா சிந்தாமணி பிள்ளையார் அறங்காவற் சபைத் தலைவர் வி.தேவகுமாரனிடம் மாமன்ற சமூகநலன் குழுத்தலைவர் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா கையளிப்பதைப் படத்தில் காணலாம்.


# வைத்தியர் சத்தியமூர்த்திக்கு சர்வதேச மனிதாபிமான விருது!

வவுனியா பொது மருத்துவமனையில் வைத்தியர் மேலதிகாரியாக தற்போது பணியாற்றும் வைத்தியர் த. சத்தியமூர்த்திக்கு சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தின் 2010 ஆம் ஆண்டுக்கான உள்ளக மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது இவர் மேற்கொண்ட மனிதாபிமானப் பணிகளுக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினால் ஆண்டு தோறும் வழங்கப்படும் இவ்விருது பேரவலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு சேவையாற்றிய பொது நிறுவனங்கள் அல்லது ஆளுமை மிக்க தனி மனிதர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது முறையான வைத்திய வசதிகள் இன்றி மருந்துத் தடைகளுக்கு மத்தியில் தனது உயிரையும் பொருட்படுத்தாது உணர்வுபூர்வமாக பணியாற்றிய சத்தியமூர்த்திக்கு 2010 ஆம் ஆண்டுக்கான விருதை வழங்குவதில் தாங்கள் பெருமை அடைவதாக சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-5)



# திருமலை புறாமலைத்தீவு வனஜீவராசிகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படவுள்ளது

திருகோணமலை மாவட்டம் நிலாவெளி கடற்பகுதியில் அமைந்துள்ள புறாமலை தீவு வன ஜீவராசிகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் இத்தீவுக்கு உல்லாசப் பிரயாணிகள் எவ்வித கட்டணமும் இன்றி சுதந்திரமாகச் சென்று வரக்கூடியதாக இருந்தது. இனி இத்தீவு வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் நிர்வகிக்கப்படவுள்ளதால் இங்கு செல்வதற்கு கட்டணம் அறவிடப்படவுள்ளது.

இதன் படி பெரியவர் ஒருவருக்கு 40 ரூபாவும் சிறியவர்களுக்கு 20 ரூபாவும் வெளிநாட்டவர்களுக்கு 10 டொலர்களும் கட்டணமாக அற விடப்படும். பாடசாலை மாணவர்களுக்கு 10 ரூபாவும் கட்டணமாக அறவிடப்படும். இதற்கு புறம்பாக சேவைக் கட்டணமும் அறவிடப்படும். வெளியிடங்களில் இருந்து வரும் படகுகள் புறாமலையில் தரித்து நிற்பதற்கு 125 ரூபாவும் கட்டணமாக இனி வரும் நாட்களில் அறவிடப்படும்.

வன ஜீவராசிகள் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் முதலாவது தீவுப் பூங்கா இதுவாகும். இத்திணைக்களம் 17 பூங்காக்களை நாடெங்கும் நிர்வகித்து வருகின்றது. (ஸ்ரீ-2)

## மின்சாரம் தொடர்பான தகவல்களை வழங்க புதிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

மின்சார தடை, பகல் நேரங்களில் ஒளிரும் மின் விளக்குகள் மற்றும் சட்டவிரோத மின் இணைப்புக்கள் தொடர்பாக தகவல் வழங்குவதற்கு விசேட தொலைபேசி இலக்கங்களை இலங்கை மின்சார சபை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி 1987 மற்றும் 1910 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு இது தொடர்பான தகவல்களை பொதுமக்கள் வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி இலக்கங்கள் 24 மணி நேரமும் சேவையில் இருக்கும் என்றும் இலங்கை மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை நாடு முழுவதும் சுமார் 7 இலட்சம் வீதி விளக்குகள் காணப்படுவதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இதில் பகல் நேரங்களில் ஒளிரும் மின் விளக்குகளால் இலங்கை மின்சார சபைக்கு வருடமொன்று க்கு 2.67 பில்லியன் ரூபா நஷ்டம் ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## 2 மாதங்களில் மீள்குடியேற்ற நடவடிக்கை பூர்த்தியாகும்

### அரசு தெரிவிப்பு

வடக்கின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுள் 95 சதவீதமானவை பூர்த்தி அடைந்துள்ளதாக மீள்குடியேற்ற துறை அமைச்சின் தலைவர் செயலாளர் பி.எம்.யு.டி.பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு மாதங்களில் வடக்கின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை முழுமைப்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப் பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)


## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| தொ.இல. | பதவிகள் | பதவிக்குறியீட்டு இல. | சம்பள அளவுத்திட்டம் 66/2006 |
|---|---|---|---|
| 1. | கணக்காளர் | 104/09 | 10950-130×10-140×10-13650 |
| 2. | உட்துறைக்கணக்காய்வாளர் | 105/11 | 10450-100×10-110×10-12550 |
| 3. | வர்த்தக முகாமையாளர் | 106/10 | 10700-120×10-130×10-13200 |
| 4. | கிளை முகாமையாளர் | 208/14 | 9700-80×10-85×10-11350 |
| 5. | எழுதுநர் | 302/15 | 9450-75×10-80×10-11000 |
| 6. | விற்பனையாளர் | 308/17 | 8950-65×10-70×10-10300 |

* கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்றுநிருபப்படி ஆணைக்குழுவால் அங்கீரிக்கப்பட்ட இதரபடிகளும் வழங்கப்படும்.
* வயதெல்லை 18-45 (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது) கூட்டுறவுச் சங்கத்தில் தற்போது கடமையாற்றுபவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
* விண்ணப்பப்படிவத்தினை தலைமை அலுவலகத்தில் ரூபா 20.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். விண்ணப்பப்படிவத்துடன் தகைமை தொடர்பான விபரங்களும் இணைக்கப்பட்டுள்ளன.
* தெரிவு செய்யப்படுபவர் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய பிணைப்பணம் செலுத்த வேண்டும்.

மேற்படி பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச்சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்பட்டு விண்ணப்பங்கள் யாவும் 17.06.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு தலைவர், ப.நோ.கூ.சங்கம், காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தபால் உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், குறியீட்டிலக்கம் தவறாது குறிப்பிடல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றிய பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
ப.நோ.கூ.சங்கம் (வ-து),
காரைநகர்.

(சி-3328)

# அறிவுப் பொருளாதாரம் ஒரு பரடைம் சிவ்ட்

1970ல் குன் (Kuhn) என்னும் விஞ்ஞானி பரடைம் சிவ்ட் என்னும் புதிய எண்ணக்கருவினை "The Structure of Scientific revolution" என்னும் தனது நூலில் அறிமுகம் செய்தார். பரடைம் சிவ்ட் என்பது ஒரு விடயம் குறித்து ஒருவரின் பார்வையில் ஆழமான சிந்தனை மாற்றத்துடன் (Profound Change in thoughts) அதனை உற்று நோக்குதல் அதன் பெறுமதி என்பனவற்றில் யதார்த்தமான பார்வையை செலுத்துதல் என குன் விளக்கமளிக்கின்றார். எளிமையாகக் கூறினால் கடந்த கால விதிமுறைகளை கைவிட்டு புதிய நிலைமை ஒன்றிற்கு மாறிக் கொள்ளுதல், குன்னுடைய "பரடைம் சிவ்ட்" கோட்பாட்டுத் தடைகளை தகர்ப்பதுடன் மாற்றத்திற்கான செயன்முறைகள் மிருதுவாகவும் இயல்பாகவும் இடம்பெறும் எனவும் கூறுகின்றார்.

மேலும் நெகிழ்வற்ற எண்ணங்கள் நம்பிக்கைகள் என்பனவற்றை தகர்ப்பதும் பரடைம் சிவ்ட் எனக் கொள்ளப்படும். மாற்றத்திற்கான செயன்முறைகள் வலிமிகுந்ததாக காணப்பட்டாலும் புதிதாக ஆக்குதல், புதிதாக ஒழுங்கமைத்தல், மற்றும் மீள் வரைவிலக்கணப்படுத்தல் மூலம் பரடைம் சிவ்ட் அல்லது ஆழமான சிந்தனை மாற்றம் நிகழ்ந்துவிடும் எனவும் கூறுகின்றார்.

"குன்" அவர்கள் விஞ்ஞானத்துறையில் உலகில் நிகழ்ந்த மாற்றங்களை படம்பிடிப்பதற்கு பரடைம் சிவ்ட் எண்ணக்கருவினை (Concept) பயன்படுத்தினார். ஆனால், பரடைம் சிவ்ட் எண்ணக்கருவினை பின்னர் வந்த அறிஞர்கள் விஞ்ஞான உலகத்தில் இருந்து வெளியே எடுத்து பரந்துபட்ட உலகப் பார்வைக்கு (World view) அக்கோட்பாட்டினை பயன்படுத்தினர்.

இக்கட்டுரையானது பழம் பொருளியல் கோட்பாடுகளும், பழம் பொருளியல் பண்டிதர்களதும் சிந்தனைகள் மீது அறிவுப்பொருளாதாரம் எவ்வாறு ஒரு பரடைம் சிவ்டாக இருக்கின்றது என்பதனை பார்க்கின்றது.

### அறிவுப் பொருளாதாரம் என்றால் என்ன?

இன்று அறிவுப் பொருளாதாரம் என்ற சொல் பொருளியலாளர்கள், திட்டமிடுவோர், கல்வியியலாளர்கள் மற்றும் உயர் தொழில் வாண்மையாளர்களிடையில் மிகப் பிரபல்யமான வார்த்தையாக காணப்படுகின்றது. அறிவு என்னும் பதம் அறிஞர்களிடையே மிகப் பழைய பதமாகக் காணப்பட்டாலும் அறிவுப் பொருளாதாரம் என்னும் எண்ணக்கரு புதியபதமாகும். முயற்சியாளர்கள் தொழில் உரிமையாளர்களிடம் முயற்சியாண்மை, அறிவு, நிறுவன ஒழுங்கமைப்பு பற்றிய அறிவு என்பன காலாகாலமாக இருந்து வந்தாலும் அறிவுப் பொருளாதாரம் என்ற கோட்பாடு அதனிலும் மாறுபட்ட புதிய கோட்பாடு ஆகும்.

அறிவுப் பொருளாதாரம் என்ற பதத்தினை விளங்கிக் கொள்வதற்கு முன்னர் பொருளாதார கோட்பாடுகள் குறித்த வரலாற்றுப் பின்னணியொன்றினை நோக்குவதன் ஊடாகவே அறிவுப் பொருளாதாரத்தினை விளங்கிக் கொள்ள முடிவதுடன் 'பரடைம் சிவ்ட்' இனையும் புரிந்து கொள்ள முடியும்.

### பொருளியல் கோட்பாடுகளின் வரலாற்றுப் பின்னணி

1776இல் பொருளாதாரம் குறித்த "தேசங்களின் செல்வம்" என்ற நூலினை அடம் ஸ்மித் என்பவர் எழுதினார். இந்நூல் வெளிவந்த பின்னர் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியின் போது உள்ளீடுகளாகப் பயன் படுத்தப்படும் உழைப்பு, பௌதீக முதல் (நிலம்) சேர்மானத்தின் போது உத்தம சேர்மானம் அல்லது ஒப்பீட்டு செலவு பற்றி முயற்சியாளர்களின் கவனத்திற்கு வந்தது. அதிலும் உற்பத்தியின் போது பயன்படும் மேற்படி உள்ளீடுகள் இயற்கையின் நன்கொடையுமாகும். ஒப்பீட்டு செலவு நன்மை அடிப்படையில் பொருளாதார வளர்ச்சி, சர்வதேச வர்த்தகம் என்பவற்றிலும் நாடுகள் ஈடுபடும்.

எளிதாக இதனை விளக்குவதாயின், பொருளாதார வளர்ச்சி உழைப்பு, முதல் என்ற காரணிகளின் இணைப்பின் தொழிற்பாடு என்பதாகும். (Economic growth is the faction of labour and capital) 1930கள் வரை உற்பத்தியின் போது பயன்படுத்தப்படும் உள்ளீடுகள் பற்றிய சிந்தனைகளில் உழைப்பு, முதல் என்பது பற்றியே பெருமளவு விவாதிக்கப்பட்டது. தவிர மனிதமுதல், நிறுவனஅறிவு, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்ற உள்ளீடுகள் பற்றி சிந்திக்கப்படவில்லை. பொருளியல் கோட்பாடுகளை கேள்விக்குரியதாக்கும் இம் மாற்றம் 1960களில் ஏற்பட்டது. அறிவுப் பொருளாதாரம் என்ற பரடைம் சிவ்ட் இக் காலப்பகுதியில் அறிமுகமாகின்றது.

அறிவுப் பொருளாதாரம் என்ற பதத்தினை 1962இல் பிரிள்ஸ்டன் பல்கலைக் கழக பொருளியல் பேராசிரியர் மக்ளுப் (Machlup) என்பவர் தனது நூலாகிய "The Production and distripution of knowledge in the United states" என்பதில் அறிமுகப்படுத்தினார். இச் சொல் அறிமுகப்படுத்தப்பட்டு மூன்று தசாப்தங்களின் பின்னர் உலகப்பொருளாதாரமானது சந்தைப் பொருளாதாரமாக (Market economy) தாராளமயப்பட்டதாக சந்தைகள் ஒன்றிணைக்கப்பட்டதாக மாற்ற மடைந்தன. அதாவது 1990களில் உலகப்பொருளாதாரம் பூகோளமயப் படுத்தப்பட்ட தோற்றத்தில் மாற்றம் ஏற்பட்டது.

மேற்படி மாற்றத்தின் மூலம் அடம் ஸ்மித் கூறிவந்த உற்பத்தி, சிறப்புத் தேர்ச்சி அல்லது பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும் ஒப்பீட்டு செலவு அடிப்படையில் நிகழ்கின்றது என்ற கருத்தும் மாற்றத்திற்குள்ளானது. அதாவது அடம் ஸ்மித்தின் கருத்துப்படி உற்பத்தியும் வர்த்தகமும் ஒப்பீட்டுச் செலவுக் கோட்பாட்டுப் படியானது என்ற கருத்தினை பிரதியீடு செய்வதாக அல்லது அதற்குப் பதிலாக "போட்டிரீதியான நன்மைகள்" என்ற சிந்தனை மாற்றம் ஏற்பட்டது. இது அறிவுப்பொருளாதாரத்தின் பண்பாகும்.

மேலும் அடம் ஸ்மித் தேசங்களின் செல்வம் என்ற நூலில் மனிதன் ஒரு மூலதனம் என்றோ, மனிதனுடைய நுட்பங்கள் (Human Skills), அறிவு என்பன பற்றி யோசிக்கவில்லை. அதாவது வேறுவகையில் இதனைக் கூறினால் மனித முதலீடுகள் (Human Capital) அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் செலுத்தும் பங்கினை பற்றி ஆழமாகக் கூறவில்லை. தேசங்கள் உலகமயமாதல் போக்கினால் ஒன்றிணைவதும் தங்கியிருப்பதுமான இன்றைய உலக ஒழுங்கில் உலக நாடுகள் போட்டித் தன்மை மிகுந்த சூழலில் வாழவேண்டியுள்ளது.

சர்வதேச போட்டித்தன்மை நாடுகளின் உற்பத்தியில் புத்தாக்கம் (mnovation) பெறுமதி சேர்கை (value addition) உற்பத்திகளை வேறுபடுத்துதல் (differentiation of product), புதிய உற்பத்திகள், இலட்சினைகளின் அடிப்படையில் தரம் காட்டுதல் போன்ற பல்வேறு போட்டித் தன்மைகளினை நிறுவனங்கள் பயன்படுத்த வேண்டியுள்ளது.

இவற்றினை செய்யும் நிறுவனங்கள் பௌதீக முதலீட்டில் தங்கியிருப்பதனை விட, மனித முதலீட்டில் (Human resource development) அபிவிருத்தியில் அதிகளவு தங்கியிருக்க வேண்டியுள்ளது.

எனவே அடம் ஸ்மித்தின் பழம் பொருளியலானது (classical world) பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய அல்லது செல்வங்களை தேட பெருமளவு உடல் உழைப்பிலும், பௌதீக முதலீட்டிலும் தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஆனால் இன்றுள்ள ஒன்றிணைக்கப்பட்ட தேசங்களின் பொருளாதாரங்கள் உலகமயமாக்கல், போட்டித்தன்மை உலகொன்றில் அறிவுத் தொழிலாளர்களாலேயே உற்பத்தியில் ஈடுபடமுடியும். அறிவுத் தொழிலாளர்கள் உண்மையில் தலையாலே வேலை செய்பவர்கள். அறிவுப் பொருளாதாரமொன்றில் முக்கிய பண்பு இதுவாகும்.

இவ்வறிவுப் பொருளாதாரத்தில் ஏற்கனவே கூறியது போல் உற்பத்தியின் உள்ளீடுகளாக உழைப்பு, முதல் என்பன இரண்டாம் இடத்திற்குப் போய் R & D, ICT, S and T, வாண்மைத்தன்மை (Professionalism) Vocationalisation என்பனவே முதன்மையான உள்ளீடுகளாக அமையும். அறிவுப் பொருளாதாரத்தில் செல்வத்தினை உருவாக்கும் முதன்மை சாதனமாக அறிவு காணப்படுகின்றது. எனவே அறிவினை பிரயோகிப்பது, அதனை பரப்புவது உலகப் பொருளாதாரமொன்றில் செல்வத்தினை அதிகரிப்பதற்கே என்ற கருத்தியல் அறிவுப் பொருளாதாரமொன்றின் தாரக மந்திரம்.

சுருங்கக் கூறுவதாயின் வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் உருவாக்குவதில் அறிவின் உற்பத்தி, பரம்பல், அறிவின் விரிவாக்கம் என்பன அறிவுப் பொருளாதாரத்தின் செயற்பாடாகும். அறிவுப் பொருளாதாரமொன்றில் செல்வமானது அடம் ஸ்மித் கூறியது போல் பௌதீக சாதனங்களைக் கொண்டு அல்ல. அறிவினை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்படுகின்றது. இதனை உருவாக்குபவர்கள் அறிவுத் தொழிலாளர்கள் எனப்படுகின்றனர். அறிவுப் பொருளாதாரத்தில் அறிவு ஓர் ஆக்க சாதனமாகியுள்ளது. பொருளியல் கோட்பாடுகளில் இது ஆழமான சிந்தனை மாற்றம் அல்லது ஒரு பரடைம் சிவ்ட்.

அறிவுப் பொருளாதாரம் எனும் போது சிலர் தனியே தகவல் சமூகம் என்றும் அல்லது உயர் தொழில்நுட்ப சமூகம் (High technology) என்றும் வேறு சிலர் ICT சமூகம் என்றும் வியாக்கியானப் படுத்த முயல்கின்றனர். உண்மையில் இவை அனைத்தும் உள்ளடக்கப்பட்டதுடன் கீழ்வரும் நான்கு தூண்களில் அறிவுப் பொருளாதாரம் தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது. அதாவது நான்கு பிரதான பரப்புகள் கொண்டதாக காணப்படுகின்றது.

ஒரு பொருளாதாரத்தின் வளர்ச்சி, அபிவிருத்தி என்ற புலத்தில் இந்நான்கு தூண்கள் அறிவுப் பொருளாதாரத்தின் முக்கிய தூண்களாகும்.

1) சூழல் (Enviornment)
2) தகவல் தொழில் நுட்பம் (ICT)
3) மனிதவள அபிவிருத்தி அல்லது மனித முதலீடு (HRD or HC)
4) புத்தாக்கம் (Innovation)

### இலங்கையும் அறிவுப் பொருளாதாரமும்

அறிவுப் பொருளாதாரத்திற்கும் பொருளாதார வளர்ச்சி அல்லது அபிவிருத்தி என்பதற்கும் நேரடித் தொடர்பு காணப்படுகின்றது. ஆனால் ஒரு நாட்டினுடைய அறிவுப் பொருளாதாரத்தின் மட்டத்தினை (level of the knowledge) அளப்பதற்கான பொருத்தமான அளவைகள் அல்லது நேர்த்தியான சுட்டிகள் காணப்படவில்லை. இது இலங்கைக்கும் பொருந்தும். தற்போதைய நிலையில் மனித அபிவிருத்தியினை அளப்பதற்கு மனித அபிவிருத்திச் சுட்டியே (HDI) பயன்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் மனித அபிவிருத்திச் சுட்டியில் சேர்க்கப்படும் கல்வி அறிவு என்பதில் பாடசாலை சேர்வோர் வீதமும், கல்வி அறிவு மட்டமும் சேர்க்கப்படுகின்றதே ஒழிய அதனுள் S & T, ICT, R&D, உயர்கல்வி என்பன சேர்க்கப்படுவதில்லை. உண்மையில் இவைதான் மனித அபிவிருத்தியின் உண்மையான வலுக்கள். இவ் வலுக்களே அறிவுப் பொருளாதாரத்தினை தூண்டுவன. பொருளாதார வளர்ச்சிக்கான அவசியமான உள்ளீடுகள் இவையாகும்.

மேற்படி உள்ளீடுகளில் கொரிய குடியரசு, சிங்கப்பூர், மலேசியா, மக்கள் சீன குடியரசு என்பவற்றிற்குப் பின்னாலேயே இலங்கை காணப்படுகின்றது. R&D யில் மேற்படி நாடுகள் (GDP) தேசிய வருமானத்தில் 1.5% ஐ செலவிட இலங்கையானது 0.15% ஐ செலவிடுகின்றது. கொரியா, சீனா, சிங்கப்பூர் என்பன 50% ற்கு மேலான தமது மாணவர்களை பல்கலைக்கழக உயர் கல்விக்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது. சிங்கப்பூரில் அரச செலவினத்தில் 2வது இடத்தினை கல்விக்கான செலவு பெற்றுள்ளது. ஆனால் இலங்கையில் உயர் கல்வி வாய்ப்பானது தனியார் அரச துறைகளில் 15% மான மாணவர்களுக்கே வாய்ப்பினை அளிக்கின்றது.

சீனாவும் சிங்கப்பூரும் விரைவாக வளர்ச்சியடையும் பொருளாதாரமாக



இருப்பதற்கு அறிவுப் பொருளாதாரம் காரணமாக இருக்கின்றது. எனவே ஏற்கனவே கூறியது போல் அறிவுப் பொருளாதாரத்தில் அறிவின் பரம்பலும் அறிவின் புத்தாக்கமும் பொருளாதார வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் தூண்டும் உள்ளீடுகளாகும்.

இலங்கையில் சேவைத்துறையின் பங்களிப்பானது 58% என்ற அளவில் நிலைமாற்றம் அடைந்துள்ளது. CIMA கற்கையில் உலகில் 2வது மாணவர் தொகையைக் கொண்ட நாடாகவுள்ளது (CIMA Traind Students) ஆனாலும் ஆசியாவின் ஏனைய போட்டியாளர்களுடன் இலங்கையை ஒப்பிடுமிடத்து உயர்கல்வி வாய்ப்பு, ICT, புத்தாக்கம் என்பனவற்றில் மெதுவான வளர்ச்சியினையே இலங்கை கொண்டுள்ளது. இலங்கை கல்வி அறிவு வீதத்தில் 100% ஐ கிட்டியதான வளர்ச்சியினைக் காட்டினாலும், தரமான கல்வி வளர்ச்சியிலும் உயர்கல்வியிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% மட்டுமே கல்வி செயற்பாடுகளுக்கு ஒதுக்குவதுடன் இதில் 1/5 பங்கே மூன்றாம் நிலைக் கல்விக்கு செலவிடப் படுகின்றது. R&Dக்கான ஒதுக்கீடு உலகில் மிகக்குறைவான நாடாக இருப்பதுடன் ஆசியாவிலும் குறைந்த மட்டத்திலே காணப்படுகின்றது. தேசிய உற்பத்தியில் (GDP) 0.2% அளவே R&D க்கு செலவிடப் படுகின்றது. ஆகக்குறைந்தது GDP யில் 1.5% தினையாவது ஒதுக்கினால் மட்டுமே நாடு அறிவுப் பொருளாதாரத்திற்கு நகரும்.

எனவே இலங்கை அறிவுப் பொருளாதாரமாக மாறுவதற்கு மனிதவள விருத்தியில் (Human resource development) கவனம் செலுத்த வேண்டும். ஏற்கனவே கூறியது போல் ICT, S&T, R&D போன்றவற்றில் முதலீடு அதிகரிக்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கை அறிவுப் பொருளாதாரமாக மாறும்.

எனவே இலங்கைப் பொருளாதாரமொன்றில் பரடைம் சிவ்ட் ஏற்பட மனித அபிவிருத்தியில் பன்மடங்கு முதலீடுகள் இடம் பெறுதல் வேண்டும்.

ஏ.சி.ஜோர்ச்
வலயக் கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

# வியன்னா ஒப்பந்த ஷரத்துக்களை அமெரிக்கா மீறியுள்ளது



## நியூயோர்க் தூதரக தலைவர் குற்றச்சாட்டு

(நியூயோர்க்)

இந்திய துணைத் தூதரக அதிகாரியின் மகள் விவகாரத்தில் வியன்னா ஒப்பந்த ஷரத்துக்களை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சகம் தவறாக புரிந்து கொண்டுள்ளது.

உண்மையில் இந்திய தூதரக அதிகாரிக்கான அதிகாரப் பாதுகாப்பு என்பது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் செல்லுபடியாகும் என நியூயோர்க் இந்திய துணைத் தூதரகத் தலைவர் பிரபு தயாள் கூறியுள்ளார்.

அமெரிக்கா, நியூயோர்க் நகரம் மன்ஹாட்டன் பகுதியில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் துணைத் தூதரக அதிகாரியாக பணிபுரிபவர் தேபாஷித் பிஸ்வாஸ். இவரது மகள் கிருத்திகா பிஸ்வாஸ் ஆவார். இவர் தான் படித்த பள்ளியில் ஆசிரியர்கள் பற்றி தரக்குறைவான மின் அஞ்சல்களை அனுப்பியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இவ்விவகாரத்தில் கிருத்திகாவின் சட்டத்தரணி ரவி பத்ரா, அவர் தூதரக அதிகாரியின் மகள் என்பதால் அவருக்கு தூதரக அதிகார பாதுகாப்பு உண்டு. அதையும் மீறி அவர் கைது செய்யப்பட்டு அவமானப்படுத்தப்பட்டுள்ளார் என்று கூறியிருந்தார். இதை தனது பேட்டியில் கிருத்திகாவும் தெரிவித்திருந்தார்.

மேலும் ரவி பத்ரா வியன்னா ஒப்பந்தத்தின்படி இதுபோன்ற விவகாரங்களில் கைது செய்யப்பட்டவர் பற்றிய தகவல்களை அப்பகுதி நிர்வாகம் குறிப்பிட்ட தூதரகத்திற்கு தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அப்படி தெரிவிக்கப்படவில்லை என்றார்.

கடந்த வார ஆரம்பத்தில் இதுகுறித்து பேட்டியளித்த அமெரிக்க வெளியுறவு துணை செய்தித் தொடர்பாளர் மார்க் டோனர்,

ஒரு தூதரக அதிகாரியின் மகள் என்ற வகையில் அதிகார பாதுகாப்பை அவர் பெற முடியாது என்று கூறியிருந்தார்.

கடந்த 1961 இல் ஆஸ்திரியா நாட்டின் தலைநகரான வியன்னாவில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச நாடுகளின் தூதரக விவகார ஒப்பந்தத்தில் 36 ஆவது பிரிவில் சம்பந்தப்பட்ட தூதரகத்திற்கு இதுபோன்ற விவகாரங்களை உடனடியாக தாமதமின்றி தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து 37 ஆவது பிரிவில் தூதரக அதிகாரிகளுக்கான அதிகார பாதுகாப்பு அவர்களது குடும்பங்களுக்கு பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இது குறித்து பேட்டியளித்த நியூயோர்க் இந்திய துணைத் தூதரகத் தலைவர் பிரபு தயாள் கூறுகையில்,

வியன்னா ஒப்பந்தத்தில் துணைத் தூதரக உறவுகள்(1963) பற்றிய பகுதியில் 53(2) பிரிவின் படி தூதரக அதிகாரியின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரது தனிப்பட்ட அலுவலர்கள் என இரு தரப்பினரும் அதிகாரிக்கான அனைத்து சலுகைகள் மற்றும் அதிகார பாதுகாப்பை பெறுவர். அதன்படி பொலிஸார் கிருத்திகா பிஸ்வாஸை கைது செய்திருக்கக்கூடாது என்றார்.

செய்யாத தவறுக்கு தன்னை பொலிஸார் கைது செய்ததற்காக 675 இலட்ச ரூபாய் (91.5 மில்லியன் டொலர் ) இழப்பீடு கோரி கிருத்திகா வழக்குத் தொடர்ந்துள்ளார். (ஸ்ரீ-2)

# தேடப்படும் 5 பயங்கரவாதிகள் பட்டியல்; பாகிஸ்தானிடம் ஒப்படைத்தது அமெரிக்கா



(கராச்சி)

உலகில் சதித்திட்டம் தீட்டி செயற்பட்டு வரும் பயங்கரவாதிகள் 5 பேர் கொண்ட பெயர் பட்டியலை அமெரிக்கா பாகிஸ்தானிடம் கொடுத்தது. இந்த நபர்களின் முழு விபரமும் இவர்களை கைது செய்ய பாகிஸ்தான் அரசு முழு நடவ்டிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளது.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஒசாமா பாகிஸ்தானில் பதுங்கியிருந்த போது அமெரிக்கா படையினரால் வேட்டையாடப்பட்டான். இதில் இருந்து அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் மீது சந்தேகம் வலுத்தது.

காரணம் உள்ளூர் ஆதரவு இல்லாமல் ஒசாமா எப்படி இங்கு வாழ்க்கை நடத்தியிருக்க முடியும் என்று அமெரிக்கா கேட்கிறது.

இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் கிலாரிகிளிண்டன் பாகிஸ்தான் சென்றார். அங்குள்ள பாதுகாப்புத் துறை அதிகாரிகளிடம் சந்தித்து பேசினார்.

இதனையடுத்து அமெரிக்காவால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் 5 பேர் கொண்ட பட்டியலை கொடுத்தார். இதில் அடங்கியிருப்பதில் முக்கியஸ்தர்கள் விபரம் வருமாறு,

அல்கொய்தாவின் முக்கியப்புள்ளியும், ஒசாமாவின் வலதுகர மாக இருந்தவருமான அயுமான் அல்ஜவாரி, தலிபான் இயக்க தலைவர் முல்லாஒமர், சிராஜ் ஹக்காரி (ஹக்கானி அமைப்பின் ஆப்ரேஷனல் கமாண்டர்), இலியாஸ் காஷ்மீரி (மும்பை தாக்குதலில் உள்ள ஒரு சதிகாரன்) ஆதித்யா அப்துல் ரஹ்மான்(லிபிய நாட்டில் அல்கொய்தாவை செயற்படுத்துபவன்)

இந்த பயங்கரவாதிகள் குறித்த முழு விபரம் உடனடியாக தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. பாகிஸ்தான் விபரமோ, கைது செய்யவோ மறுக்கும் பட்சத்தில் அமெரிக்கா ஒசாமா பின்லேடனை வேட்டையாடியது போல் மீண்டும் பலமுறை இறங்கிட முயற்சிக்கும் என பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் டான் பத்திரிகை கூறியுள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு

## ஆறு பேர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வட மேற்கில் உள்ள பஜாவூர் பகுதியில் மக்கள் நெருக்கம் அதிகமாக உள்ள இடத்தில் குண்டு வெடித்தது.

இதில் 6 பேர் பலியாகினர். பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். விபத்து நடந்த இடத்தில் மீட்புக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# கனடாவில் பஞ்சாப் மொழியின் ஆதிக்கம்

(றொரண்டோ)

கனடா நாட்டில் வசிக்கும் மக்களில் அதிகம் பேசுவோர் மொழிகளின் வரிசையில் பஞ்சாப் மொழி இடம் பிடித்துள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திற்கு கனடா நாட்டிற்கும் நீடித்த தொடர்பு இருந்து கொண்டு வருகிறது.

பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் கனடாவில் சுய தொழில் மற்றும் பல்வேறு நிறுவனங்களில் உயரதிகாரிகளாக பணிபுரிந்து வருகின்றனர். அதுமட்டுமல்லாமல் அந்நாட்டின் அரசியல் கட்சியான கன்சவேட்டிவ் கட்சி சார்பாக பாராளுமன்றிற்கு உறுப்பினர்களை அனுப்பி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 2.71 இலட்சமாக இருந்த இப்பிரிவு மக்கள் தொகை கடந்த 2006 ஆம் ஆண்டில் 3.67 இலட்சமாக அதிகரித்துள்ளது.

தற்போது கனடாவில் ஆங்கிலம், பிரெஞ்சு, சீனா, இத்தாலி, ஜேர்மன் போன்ற மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அந்நாட்டில் பஞ்சாப் மொழி 6ஆவது இடத்தில் இருந்து வந்தது .தற்போது நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. (ஸ்ரீ-2)




# இணைய சேவையை முடக்கியமைக்காக ஹோஸ்னி முபாரக்கிற்கு 34 மில். அபராதம்

இணைய சேவையை முடக்கியமைக்காக எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கிற்கு 34 மில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளர்ச்சி இடம்பெற்ற காலத்தில் இணைய தொடர்பாடல் சேவையை ஜனாதிபதி முபாரக் முடக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மேலும் இருவருக்கும் இதே குற்றச்சாட்டின் அடிப்படையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.


83 வயதான முபாரக் தற்போது வீட்டுக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்க எதிர் போராட்டங்களின் போது இடம்பெற்ற உயிரிழப்பு சம்பவங்களுக்கு எதிராகவும் ஹோஸ்னி முபாரக் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஹோஸ்னி முபாரக் ஆட்சியில் அங்கம் வகித்த 20 அமைச்சர்களும் சில வர்த்தகப் பிரமுகர்களும் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் எகிப்தின் முன்னாள் உள்துறை அமைச்சர் அபீல் அல் ஹாடிக்கு கடந்த வாரம் 12 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் பிரதமர் அஹமட் நாசீப் மற்றும் உள்துறை அமைச்சர் அபீல் அல் ஹாடி ஆகியோருக்கு இணையத் தொடர்பாடல் சேவையை முடக்கிய குற்றச்சாட்டின் பேரில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மற்றும் அவரது மனைவி மிச்சேல் ஒபாமா இருவரும் சமீபத்திய ஐரோப்பிய பயணத்தின் போது பிரிட்டனுக்குச் சென்றிருந்தனர். அப்போது பிரதமர் இல்லத்தில் ஒபாமா தம்பதியரும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தம்பதியினரும் அமெரிக்க மற்றும் பிரிட்டன் இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு தங்கள் கையால் விருந்து பரிமாறி மகிழ்விப்பதை படத்தில் காணலாம்.

# மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வாரா ஸ்டாலின்?



(சென்னை)

14 ஆவது சட்டசபையில் தி.மு.க. வின் தலைவர் என்ற அந்தஸ்தை ஸ்டாலின் பெற்றுள்ளார். நீண்டகால காத்திருப்பிற்கு பின் ஸ்டாலினுக்கு கிடைத்துள்ள பதவி அவரது தந்தையும் சட்டசபை தேர்தலில்12 முறை வெற்றிபெற்று சாதனை படைத்துள்ள கட்சியின் தலைவருமான கருணாநிதி ஸ்டாலினுக்கு கீழ் சட்டசபையில் பணியாற்ற வேண்டும்.

தி.மு.க படுதோல்வியை சந்தித்துள்ள இந்த சமயத்தில் சட்டசபையில் ஸ்டாலினின் செயற்பாடுகள் கட்சிக்கு புத்துணர்ச்சியைத் தரும் என்ற எதிர்பார்ப்பு கட்சியின் மத்தியில் எழுந்துள்ளது. சட்டசபையில் எதிர்க்கட்சி தகுதி கூட தி.மு.க. வுக்கு இல்லை என்றாலும் மக்கள் மன்றத் தில் தி.மு.க. தான் எதிர்க்கட்சி. எனவே ஸ்டாலினிடம் மிகுந்த எதிர்பார்ப்பு கட்சியினர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் உள்ளது.

சென்னை மேஜராக செயற்பட்ட விதம் மக்கள் மத்தியில் ஸ்டாலினுக்கு நல்ல பெயரைக் கொடுத்தது. அந்த அனுபவம் ஸ்டாலினுக்கு இப்போது உதவும். தந்தை மூலம் கிடைத்த அனுபவங்களும் கட்சி தலைவர்கள் மத்தியில் அரசியலைக் கடந்து ஸ்டாலினுக்கு இருக்கும். நட்பும் இப்போது அவருக்கும் உதவும்.

உள்ளூராட்சித்துறை அமைச்சராக பணியாற்றியுள்ளார். சிறந்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் துணையுடன் எளிதாக அந்த பணியை செய்துவிட்டார்.

ஆனால் அந்த சட்டசபையில் அவரே பணியாற்ற வேண்டும். தினமும் அதற்கான தயாரிப்புகளை செய்து கொள்ள வேண்டும். பெரும்பான்மை பலத்துடன் உள்ள அ.தி.மு.க. வுக்கு ஈடுகொடுத்து மக்கள் பிரச்சினைகளை பேசவேண்டும். முக்கியமான விவாதங்களில் பங்கேற்க வேண்டும். இது சவாலான பணி. கட்சியிலும் மக்கள் மத்தியிலும் நம்பிக்கை ஏற்படுத்தவேண்டிய நிர்ப்பந்தத்துடன் கூடிய பணி. இதை சிறப்பாக செய்ய வேண்டிய கட்டாயத்தில் ஸ்டாலின் உள்ளார்.

சட்டசபையில் இவரது செயற்பாடுகள் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் வகையில் இருக்க வேண்டும். அப்போது தான் எதிர்க்கட்சிகள் பலத்துடன் திகழ முடியும். அது ஆளும் கட்சிக்கு பெரும் சவாலைக் கொடுக்கும்

இந்த நேரத்தில் 2001-2006 சட்டசபைக் கூட்டங்களை மனதில் கொள்ள வேண்டிய கட்டாயம் ஸ்டாலினுக்கு உள்ளது. முதல்வர் ஜெயலலிதா தி.மு.க. வினரை பார்த்து எங்கே உங்க தளபதி ஓடி ஒளிந்து விட்டரார? எனக் கேட்டது தி.மு.க. வினரின் காதுகளில் இன்னும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. எந்த பிரச்சினையையும் துணிவோடும் எதிர்க்கட் சியை பொருட்படுத்தாமல் பேசும் முதல்வர் ஜெயலலிதாவின் பேச்சுக்கு ஈடுகொடுக்கும் வகையில் செயற்பட வேண்டிய நெருக்கடி ஸ்டாலினுக்கு உள்ளது.

மிகுந்த பக்குவத்துடனும் தனிப்பட்ட விமர்சனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் ஆளும் கட்சி பயப்படும் வகையில் சட்டசபைப் பணிகளை ஸ்டாலின் ஆற்ற வேண்டு ம் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது. (ஸ்ரீ-2)

## கருணாநிதி இன்று பதவியேற்பு

தமிழக சட்டசபையில் கடந்த 23ஆம் திகதி எம்.எல்.ஏக்கள் பதவியேற்றனர். திருவாரூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தி.மு.க. தலைவர் கருணாநிதி அன்றைய தினம் டில்லிக்கு கனிமொழியைப் பார்க்கச் சென்றதால் அவரும் துரைமுருகனும் எம்.எல்.ஏ.வாக பதவியேற்கவில்லை.

அன்றைய தினமே அமைச்சர் மரியம் பிச்சை விபத்தில் இறந்ததால் அமைச்சர் சிவபதி, திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. மனோகரன் ஆகியோர் திருச்சிக்கு சென்று விட்டனர்.


இதனால் அவர்களும் அன்றைய தினம் எம்.எல்.ஏ.க்களாக பதவியேற்கவில்லை. கடந்த 27ஆம் திகதி தற்காலிக சபாநாயகர் செ.கு. தமிழரசன் முன்னிலையில் சிவபதி, மனோகரன் இருவரும் எம்.எல்.ஏ.க்களாக பதவியேற்றனர்.

இந்த நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதியும் முன்னாள் அமைச்சர் துரைமுருகனும் இன்று திங்கட்கிழமை எம்.எல்.ஏ.க்களாக பதவியேற்கிறார்கள். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

## கனிமொழிக்கு பிணை கிடைக்குமா?

## டில்லி உயர்நீதிமன்றில் இன்று விசாரணை.



ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில் கனிமொழி எம்.பி. கடந்த 20 ஆம் திகதி சி.பி.ஐ. பொலிஸாரால் கைது செய்யப்பட்டு டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கனிமொழி எம்.பி. கலைஞர் டி.வி.யில் பங்கு தாராக உள்ளார். ஸ்பெக்ட்ரம் முறைகேடு வழக்கில் சிக்கிய சினியுக் பிலிம்ஸ் நிறுவனத்திடம் இருந்து கலைஞர் டி.வி.க்கு பணம் கைமாறிய குற்றச்சாட்டின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கலைஞர் டி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமாரும் கைதாகி டில்லி திஹார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கனிமொழி யின் பிணை மனுவை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் தள்ளுபடி செய்ததால் டில்லி உயர் நீதிமன்றில் பிணை கேட்டு கடந்த 23 ஆம் திகதி பிணை மனு தாக்கல் செய்யப்பட்டது. கனிமொழி தனது மனுவில் என் மீதான குற்றச்சாட்டுக்கள் தவறானவை. எனவே மனிதாபிமான அடிப்படையில் எனக்கு பிணை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். மறுநாள் 24 ஆம் திகதி இந்த மனு டில்லி உயர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கு விசாரணையை இன்றைய தினத்திற்கு நீதிபதி அஜீத் பரிகோகே ஒத்திவைத் தார். இன்றைய தினம் கனிமொழி எம்.பி.யின் பிணை மனு டில்லி உயர் நீதிமன்றில் மீண்டும் விசாரணைக்கு வருகிறது. அப்போது சி.பி.ஐ. தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படுகிறது.

சி.பி.ஐ. தரப்பில் சட்டத்தரணி ஆஜராகி வாதாடவுள்ளார். கனிமொழி சார்பிலும் சட்டத்தரணி ஆஜராகி வாதாடுவார். இரு தரப்பு வாதங்களும் முடிந்த பின்பு கனிமொழி பிணை மனு மீது நீதிபதி தீர்ப்பு வழங்குவார். சட்டத்தரணிகள் வாதம் நீண்டு கொண்டே போனால் தீர்ப்பு வழங்க தாமதம் ஆகும். (ஸ்ரீ-2)



இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சருடன் இந்திய மத்திய அமைச்சர் சிதம் பரம் பேச்சுவார்த்தை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம்.

## கருணாநிதியின் வாழ்க்கையில் குருப்பெயர்ச்சியின் தாக்கம்

(சென்னை)

குருப்பெயர்ச்சி சாதகமில்லாமல் போனதால் மஞ்சள் நிறத்தில் இருந்து அடிக்கடி வெள்ளை துண்டுக்கு கருணாநிதி மாறி வருகிறார். ஆரம்பம் முதல் கறுப்பு துண்டு அணிந்த கருணாநிதி ஐந்தாண்டுகளுக்கு மேலாக மஞ்சள் துண்டுக்கு மாறினார்.

கழுத்து பகுதியில் அதிக வலி ஏற்படுவதால் கனமான மஞ்சள் துண்டு அணிந்தால் கழுத்து பகுதியில் வெப்பம் ஏற்படும். வலியை அது கட்டுப்படுத்தும் என மருத்துவர்கள் ஆலோசனைப்படி துண்டு மாற்றம் நடந்தது என தி.மு.க.தரப்பில் கூறப்பட்டது.

கருணாநிதி ரோகிணி நட்சத்திரம் இடபராசியில் பிறந்ததால் குருபலம் பெற அவர் மஞ்சள் துண்டு அணிந்தார் என ஆன்மீக பெரியோர் கூறி வந்தனர். முதல்வராக பதவியில் இருந்த காலத்தில் மஞ்சள் துண்டை அவர் தவிர்த்தது இல்லை.

தஞ்சாவூரில் இரண்டாண்டுகளுக்கு முன் மறைந்த அன்பில் பொய்யாமொழி குடும்ப திருமணம் நடந்த போது முன்னாள் துணை முதல்வர் ஸ்டாலின் தி.மு.க. கரை வேட்டியை தவிர்த்து பட்டு வேட்டி, பட்டு சட்டை அணிந்து வந்தார். அவ்விழாவில் பேசிய ஸ்டாலின் அன்பில் பொய்யாமொழியின் குடும்பத்தார் கேட்டுக் கொண்டதால் பட்டுக்கு மாறினேன் என பேசினார்.

அடுத்து பேசிய கருணாநிதி நாம் திராவிட கொள்கையில் தோய்ந்தவர்கள். எக்காரணம் கொண்டும் நம் கரை அடையாளங்களை மாற்றக் கூடாது என பட்டு வேட்டி, சட்டைக்கு எதிர்ப்பு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி தஞ்சை பெரிய கோவில் ஆயிரமாவது ஆண்டு விழாவில் பெரிய கோவில் நந்தி மண்டபத்தில் நடனக் கலைஞர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் ஆயிரம் நடனக் கலைஞர்கள் நடனமாடினர்.

இந்நிகழ்ச்சியை ரசிக்க வந்த அப்போதைய முதல்வர் கருணாநிதி பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, பட்டுத்துண்டு அணிந்து வந்தார். முன்னதாகவே மேடைக்கு வந்துவிட்ட கனிமொழி மற்றும் கருணாநிதி குடும்பத்தார் மற்றும் அமைச்சர்கள் ஓடி வந்து கருணாநிதி பட்டாடை அணிந்து வந்ததை புகழ்ந்தனர்.

தி.மு.க. படுதோல்வி, கனிமொழி கைது, ஸ்பெக்ட்ரம் பிரச்சினையால் குழப்பம் என பல தோல்விகளுக்கு இடையே கடந்த சில நாட்களாக கருணாநிதி மஞ்சள் துண்டை தவிர்த்து அடிக்கடி வெள்ளை துண்டு அணிந்து வருகிறார்.

சட்டசபை தேர்தல் முடிவுக்கு பின்னரும் கனிமொழி கைது செய்யப்பட்ட பின் டில்லி பயணத்தின் போதும் கருணாநிதி வெள்ளைத் துண்டு அணிந்திருந்தார். இதுபற்றி ஜோதிடர்கள் சிலர் கூறியதாவது, மஞ்சள் துண்டு குருபலத்துக்காக அணிவது.

மே 8 ஆம் திகதி நடந்த குருப்பெயர்ச்சி கருணாநிதிக்கு சாதகமாக இல்லை. குரு பகவான் 12 இல் உள்ளார். இந்த சூழலில் அவர் மஞ்சள் நிற துண்டு அணியாமல் வெள்ளை துண்டு அணிந்தால் அது அவருக்கு அமைதியை தரும். வெள்ளை நிறம் பொதுவாக சந்திரன், சூரியன், சுக்கிரன் ஆகிய இராசிகளுக்கானது. குருவின் பல வீனத்தை குறைத்து அமைதி தரும் என்பதால் இம்மாற்றம் நடந்துள்ளது.



அடுத்தாண்டு மே மாதம் நடக்கும் குருப்பெயர்ச்சி வரை அவர் வெள்ளைத் துண்டு அணிந்து அதற்கான பரிகாரத்தை அவரோ அல்லது அவரது குடும் பத்தாரோ மேற்கொண்டால் அவருக்கு மன அமைதி ஏற்படும். அதனால்தான் கருணா நிதி அடிக்கடி வெள்ளை துண்டுக்கு மாறி மீண்டும் மஞ்சள் துண்டு அணிகிறார் என அவர்கள் கூறினர். (ஸ்ரீ-2)

அநேகர் தங்கள் காலத்தின் பெரும்பாகத்தை பிறரை அவலத்திற்குள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். -லா புரூயர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழர் வாழ்வில் இடம்பெறும் ஒத்திவைப்புக் கலாசாரம்

நிறுவனம் வேறு அதன் உரிமையாளன் வேறு என்ற தீர்மானத்திலேயே அந்த நிறுவனத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது. நிறுவனமும் அதன் உரிமையாளனும் ஒன்று என நினைத்தால் நிறுவனத்தை இழுத்து மூட வேண்டிவரும்.

இந்த நிபந்தனை அரசுக்கும் பொருந்தும். அதாவது அரசு வேறு; அரசியல் வேறு என்ற அடிப்படையிலேதான் ஒரு நாடு இயங்க வேண்டும். அரசும் அரசியலும் ஒன்றென நினைத்தால் நாடு பரிநாசத்தைச் சந்திக்கும். இந்த நிலைமையே இலங்கையில் நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இதன் காரணமாகவே நாட்டின் அபிவிருத்தி தொடக்கம் இனப்பிரச்சினை தீர்வு வரை மந்தமடைந்து போயுள்ளன.

அரசியலில் இருந்து அரசு பிறக்கின்றது. அரசு பிறப்பெடுத்தவுடன் அது அரசியல் என்ற கூட்டில் இருந்து பறந்துவிட வேண்டும். அதை மறந்துவிட வேண்டும்.

அரசிடம் அரசியல், கட்சி பேதம், இனமத பேதம், மொழிச்சார்பு, மக்கள் சார்பு என்பன எதுவும் இருக்கக் கூடாது. அரசு, அரச நிர்வாகத்தை ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட சட்ட வரையறைகளுக்குள் நின்றுகொண்டு இயக்க வேண்டும். ஊழல், மோசடி, காலதாமதம் என எதற்குமே இடம் தரலாகாது.

அதுபோல் அரச பணியாளர்கள் எவரும் அரசுக்குக் கட்டுப்பட்டவர்களேயன்றி அவர்கள் அரசியலுக்கோ அல்லது அரசியல் கட்சிகளுக்கோ கட்டுப்பட்டவர்களாக அல்லது கட்டுப்பட வேண்டும் என்ற நினைப்புடையவர்களாக இருக்கக் கூடாது.

இத்தகைய நினைப்பு பொது நிர்வாகத்தை சுமுகமாக இயக்குவதற்குத் தடையாக இருப்பதுடன் அரசியல்வாதிகளின் தலையீடும் ஆதிக்கமும் மேலாடும்.

இத்தகைய நிலைமை படுபாதகமாக அமையுமென்பது நிறுத்திட்டமான உண்மை.

இதுவிடயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் தெளிவுடன் செயற்படாதவரை அரச அதிகாரிகளும் அரசியற் கட்சிகளுக்குத் தாளம் போடுவர். இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதுடன் ஊழல், மோசடி, செல்வாக்கு என்பன மேலாடும்.

இந்த யதார்த்தத்தை தற்போது இலங்கை முழுவதிலும் காண முடிகின்றது. அதிலும் வட பகுதியில் அதன் கடுப்பு அதிகம் எனலாம்.

இதன் ஒரு வடிவமே ஒத்திவைப்பு கலாசாரமாகும். அரசியலின் ஊடுருவல், அதன் ஆதிக்கம் என்பவற்றால் திறப்பு விழாக்கள் முதல் நேர்முகப் பரீட்சைகள் வரை ஒத்திவைக்கப்படுவதைக் காண முடிகின்றது.

குறிப்பாக நேர்முகப் பரீட்சைக்கான திகதியை அறிவித்துவிட்டு உடனடியாகவே அதனை ஒத்திவைப்பதென்பது மிகவும் கவலை தரக்கூடியது. இத்தகைய பொறுப்பற்ற செயல்கள் நீடிக்குமாயின் ஆரோக்கியமற்ற மக்கள் சமூகத்தின் உருவாக்கம் தவிர்க்க முடியாததாகி விடும்.

# இலங்கை ஜனாதிபதி மீது நடவடிக்கை எடுக்குமாறு சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## வைகோ தெரிவிப்பு

(சென்னை)

ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீது இந்திய அரசு நடவடிக்கை எடுப்பதற்கு தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

ம.தி.மு.க தொடங்கப்பட்டதன் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா சென்னை சைதாபேட்டையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வைகோ பேசுகையில்,

நாங்கள் இதற்கு முன்பு தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறோம். அவ்வாறு சேர்ந்ததால் நான் மதிப்பிழந்திருக்கின்றேன். மரியாதை இழந்திருக்கின்றேன். பரிகாசத்துக்கு ஆளாகியிருக்கிறேன். அவ்வாறு கூட்டணி சேர்ந்ததை நான் நியாயப்படுத்த விரும்பவில்லை.

எனினும் நாம் அழித்து ஒழிக்கப் படக்கூடிய நிலை வரும்போது தற்காலிகமாக சமரசம் செய்துகொள்வதில் தவறில்லை என பகத்சிங் கூறியிருக்கிறார். எங்களுக்கும் அத்தகைய சூழ்நிலை வந்தபோதுதான் தற்காலிகமாக சமரசம் செய்து கொள்ள கூட்டணி வைத்தோம்.

முன்பு அ.தி.மு.கவுடன்கூட்டணி சேர்ந்த போது நாங்கள் பணத்துக்காக சேர்ந்தோம் என வீண்பழி சுமத்தப் பட்டோம். ஆனால் கடந்த தேர்தலில் பங்கேற்கப் போவதில்லை என்ற எங்கள் முடிபின் மூலம் அந்தப் பழி துடைக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்களை கொன்று குவித்த அந்நாட்டின் ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும். அவர் செய்த போர்க் குற்றங்களுக்கு தண்டனை விதிக்க வேண்டும் என்ற குரல் உலகெங்கும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் விரைவில் கூடவுள்ள தமிழக சட்டப் பேரவையில் ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறு த்த இந்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். (ஸ்ரீ-2)

# சீனா மற்றும் ரஷ்யாவின் ஆதரவை பெற புலம்பெயர் தமிழர்கள் முயற்சி

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்கள் சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள முனைப்புக் காட்டி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டுமென சீனாவிடமும் ரஷ்யாவிடமும் உதவிகோரப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் தொடர்பில் சீன மற்றும் ரஷ்ய அதிகாரிகளுக்கு புலம்பெயர் தமிழர்கள் விளக்கமளிக்கத் திட்டமிட்டுள்ளதாக இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் திட்டத்திற்கு கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடம் புலம்பெயர் தமிழர்கள் ஆதரவு கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் உற்பத்திகளை சர்வதேச ரீதியில் விற்பனை செய்ய முடியாத வகையில் தடுப்பதற்கும் சில புலம்பெயர் தமிழர்கள் முயற்சித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் மனித உரி மைப் பேரவை மற்றும் பாதுகாப்புப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றும் முயற்சி மேற்கொள்ளப் பட்டால் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தியாவையும் சீனாவையும் இலங்கை அதிகமாகத் தங்கியிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஸ்கந்தாவில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்தும் முத்தமிழ் விழா நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரியின் அதிபர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தமிழ்நாட்டுப் பேராசிரியர் டாக்டர் சரஸ்வதி இராமநாதனும்,

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரனும் கலந்துகொள்வர். (ந)

# பேரா. மௌனகுருவின் சிறப்புக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையின் ஏற்பாட்டில் நாளை மாலை 5 மணிக்கு சிறப்புக் கருத்தரங்கு இடம்பெறும்.

இணுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இக் கருத்தரங்கில், "21ஆம் நூற்றாண்டின் சவால்களும் மரபுவழிக் கலைகளும்" எனும் விடயப் பொருளில் பேராசிரியர் சி.மௌனகுரு கருத்துரை வழங்குவார். (ந)

# உத்தேச தனியார் ஓய்வூதிய சட்டமூலம் அடுத்த மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

உத்தேச தனியார்துறை ஓய்வூதியத் திட்டம் தொடர்பிலான சட்டமூலத்திற்கு மேலும் சீர்திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக தொழிலுறவு அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

சட்டமூலம் தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்வொன்று நேற்று முன்தினம் கட்டுநாயக்கவில் இடம்பெற்றது. இதன்போது கருத்து வெளியிடும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதற்கு ஏற்கனவே பல்வேறு எதிர்ப்புக்கள் வெளியாகின.

இதன்காரணமாக சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தாமதமாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## தவறுகளையும் வாழ்த்துங்கள்



அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின் பற்றுவது என்ற போராட்டம் எழும் போது உள்ளம் சொல்வதையே பின்பற்றுங்கள்.

மகத்தான செயல்களைச் செய்யவே இறைவன் நம்மைத் தேர்வு செய்கின்றான். அவற்றைச் செய்து முடிப்போம் என்று உறுதியெடுங்கள்.

பசியால் நலிந்து வாழும் மக்களிடையே சென்று சமயப் பிரசாரமும் தத்துவ போதனையும் செய்வது அவர்களை அவமதிப்பதாகும்.

மிருக, மனித, தெய்வீகஇயல்புகளால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடம் உள்ள தெய்வீகத் தன்மையை வளர்க்கக்கூடியதுதான் நல்லொழுக்கம். மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வது தீய ஒழுக்கம்.

நீ செய்த தவறுகளை வாழ்த்து, அந்தத் தவறுகளை நீ அறியாமலேயே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன.

வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும் அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருக்க வேண்டும். அந்தக் குணங்கள் தான் அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்கு காரணங்களாகும்.

# புகைப்பழக்கத்தை நிறுத்துவதன் மூலம் ஆரோக்கிய வாழ்விற்கு வழிசமைப்போம்

இன்று உலக நாடுகளில் சமுதாயம் என்றுமில்லாதவாறு புகைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு வருகின்றது. ஏழை, பணக்காரர், சிறுவர், முதியவர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று பாகுபாடு இல்லாமலே எல்லோரையும் இந்த புகைப் பழக்கம் விட்டுவைப்பதில்லை.

உலகளாவிய ரீதியில் புகைத்தல் பழக்கம் மனித வர்த்தகத்திற்கு கேடுவிளைவிக்கும் காரணியாக இருக்கின்றது. இப்பழக்கத்தினால் உலகில் எட்டு வினாடிக்கு ஒருவர் வீதம் ஆண்டு தோறும் 60 இலட்சத்திற்கு மேல் மரணத்தை தழுவுகின்றனர்.

புகைப்பழக்கம் இன்று நேற்று வந்த

## சர்வதேச புகைப்பொருள் எதிர்ப்பு தினம் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது

தொன்றல்ல பன்னெடுங்காலமாக மனிதர்கள் பாவித்து இன்று உலகின் மூலை முடுக்குகளிலும் புகுத்துவிட்ட நாகரீகம் தான் புகைப் பழக்கம். புகைப்பிடிப்பதற்கு தானாகப் பழகுவது என்பது மிகக்கூறைவு. புறச்சூழலின் செல்வாக்குதான் அவர்களை புகையின் பால் இழுக்கின்றது. இதனைப் பாவிப்பதால் மனிதனுக்கு என்ன கிடைக்கின்றது. உண்மையில் இதில் ஒன்றும் இல்லை ஆனால் மரணம் நிச்சயம் உண்டு.

அநேகம் பேர் பொழுது போக்கிற்காகவும் விருந்துபசாரத்திலும் நண்பர்கள் ஒன்று கூடும் இடங்களிலும் சினிமா திரையரங்குகளிலும் புகைப்பிடிக்கின்றார்கள். எத்தனையோ பேர் புகையிலையில் அடங்கி இருக்கும் நச்சுத்தன்மையை அறியாமல் புகைத்தலுக்கு அடிமையாகிக் கொண்டு வருகின்றார்கள். புகைப்பதில் இளவயதினரே அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள். வளர்ந்தவர்கள் புதிதாக ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் குறைவாக காணப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வருடம் தோறும் 27 ஆயிரத்துக்கு மேல் மரணத்தை தழுவிக் கொள்கின்றார்கள் மேலும் இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப்பழக்கம் உடையவர்கள். புகைத்தல் காரணமாக 50 சதவீத மானவர்கள் இருதய நோயினாலும் 40 சதவீதமானவர்கள் புற்று நோயினாலும் மரணமாகின்றார்கள். இத்துடன் புகைப்பழக்கம் உடைய ஒருவருக்கு பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீதமானவர்களுக்குபுற்று நோய் வர வாய்ப்புண்டு.

மேலும் ஒருவர் தொடர்ந்து ஒருநாளைக்கு 10 சிகரெட் புகைப்பவராக இருந்தால் ஒரு நாளைக்கு 11 நிமிட ஆயுள் அவரிடமிருந்து குறைகிறது. இதனால் மற்றவர்களை விட 10 வருடங்களுக்கு முன்னதாகவே மரணத்தை தழுவிக் கொள்கின்றனர். மேலும் இலங்கையில் பாடசாலை செல்லும் மாணவ மாணவியரில் 7 சதவீதமானோர் புகைப் பிடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். அவர்களில் மாணவர்கள் 6 சதவீதமாகவும் மாணவிகள் ஒரு சதவீதமாகவும் உள்ளனர். சிகரெட் பிடித்தல் உடல் நலத்திற்கு கேடு என்பது தெரிந்த விடயம் தான். ஆனால் புகைப்பவர் அருகில் இருப்பவரின் கண்பார்வைக்கும் கேடு விளைவிக்கும் முகத்துக்கு நேராக புகைப்பது கேடு விளைவிக்கும். என்று பலரும் அறிந்தாலும் உங்கள் நண்பரோ, குடும்பத்தினரோ அருகில் இருந்து புகையை விடும்பொழுது திறன் பாதிப்பதோடு பார்வை சம்பந்தமான குறைபாடுகளும் ஏற்படும்.



ஆகவே, நீங்கள் புகைப்பிடிக்காவிட்டாலும் உங்கள் அருகில் இருப்பவர் புகைத்தால் தீமை இருவரது கண்களுக்கும் தான். மேலும், புகைப்பிடிப்பவர்களுக்கு பக்கத்தில் சிறுவர் இருந்தால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி குன்றும்.

புகைப்பிடிப்பதை நிறுத்துங்கள் நிறைய நன்மை கிடைக்கும் என்று மருத்துவ உலகம் அவ்வப்போது கூறுகின்றது. இருந்த போதிலும் புகைப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகின்றதே தவிர குறையவில்லை இந்நிலையில் சிகரெட் பிடிப்பதை நிறுத்தினால் சத்திர சிகிச்சைக்கு பின்னர் வரும் புண் விரைவில் குணமாகும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது. புகைப் பிடிப்பவரின் புண் குணமாக நாட்செல்லும். மேலும், புகைப்பிடிப்பதை பின்வரும் ஆபத்திலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்று மருத்துவ உலகம் கூறுகின்றது.

மரடைப்பு ஏற்படும் அபாயம் குறைதல், இரத்தத்தின் கொலஸ்ரோல் குறைதல், நுரையீரல் பாதிப்புக்குறைதல், இருமல், கட்டுகள் வருதல், நுரையீரல் புற்று நோய்க்கான வாய்ப்புகள் குறைதல், இரத்தத்தில் புற்று நோய்க்கான வாய்ப்பு குறைதல், இரத்தத்தில் கார்பன் மோனாசைடு நீக்குதல், உணவின் சுவையினை அறிதல், வெறுக்கத்தகதா நாற்றத்தை போக்கி நாற்றம் இல்லாத சுவாசம் நிலைநாட்டும், பற்கள் வெண்மையடைதல், வயிற்றுக் குடலில் புண்நீக்குதல் போன்ற பல்வேறு நன்மைகள் புகைத்தலை நிறுத்துவதன் மூலம் கிடைக்கப்பெற முடிகின்றது.

புகைத்தலை விட சில அறிவுறுத்தல்கள் அவையாவன, (1) புகைப்பது இல்லையென உறுதியாக முடிவினை எடுத்தல் (2) புகைப் பிடிப்பவரை விட்டு விலகியிருத்தல் (3)பணத்தினை மிச்சம் பிடிக்க முடியும் (4) தினமும் இருதடவைகளில் சுடுநீரில் குளித்துவிட்டு குளிர்பானங்களை அருந்துதல் (5) தினமும் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்தல் போஷாக்கான உணவினை உண்ணுதல் குறிப்பாக பழவகைகள் உண்ணுதல் ஆகும்.

ஈற்றில் நோயற்ற வாழ்வே உலகில் சிறந்த சுகம் எனவே சுகத்தை பெற வேண்டுமாயின் புகைத்தலை விட்டு சுகதேகியாக மக்கள் வாழவேண்டும்.

செ.குமாரசிங்கம். ச.நீ,
செயலாளர்,
வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்,
பட்டினசபை வீதி,
சங்கானை.

# வீதிகளுக்கு பெயரிடும்போது சிறுபான்மை மக்கள் புறக்கணிக்கப்படுவதாக குற்றச்சாட்டு

வீதிகளுக்கு பெயரிடும் போது சிறுபான்மை மக்களின் கருத்து கேட்கப்படுவதில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மைக்காலமாக தலைநகர் கொழும்பு மற்றும் ஏனைய சில நகரங்களில் வீதிகள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வருகின்ற போதி லும் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் கேட்கப்படுவதில்லை என தெரிவக்கப்படுகிறது.

குறிப்பாக அண்மையில் ஹெவ்லொக் வீதி சம்புதத்வ ஜயந்த மாவத்த என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. எனினும் குறித்த வீதியில் சிறுபான்மை மக்களே அதிகளவில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகர எல்லையை அண்டிய பிரதேசத்தில் சிங்கள மக்கள் சிறுபான்மையாகவே வாழ்கின்றனர். இவ்வாறான ஓர் பின்னணியில் சிறுபான்மை மக்களின் கருத்துக்களும் அறியப்பட வேண்டியது அவசியமானது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

டிக்மன்ஸ் வீதி மற்றும் குயில் போட் கிரசன்ட் போன்னவூம் முறையே ஜேம்ம் பீரீஸ் மாவத்தை மற்றும் பிரேமசிறி கேமதாச மாவத்தை என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம் செய்வதில் தவறில்லை என்ற போதிலும் பிரதேச மக்களின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளிக்காது இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்படுவது அதிருப்தி அளிப்பதாக விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

வடக்குகிழக்கிலும் இவ்வாறு பெரும்பான்மை அடையாளங்களை வியாபிக்கும் முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

போரில் சேதமடைந்த இந்து ஆலயங்களை புனரமைப்பதனை விடவும் குறித்த பிரதேசங்களில் புதிய பௌத்த ஆலயங்கள் அமைப்பதில் அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மாவட்ட மட்ட சதுரங்க சுற்றுப் போட்டி முடிவுகள்

கடந்த 14, 15 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட மட்ட சதுரங்க சுற்றுப்போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் வருமாறு.

**15 வயது கீழ் ஆண்கள்**

1.பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி
2. யாழ்.இந்து கல்லூரி
3. தெல்லிப்பழை மகாயனக் கல்லூரி

**15 வயது கீழ் -பெண்கள்**

1. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
2.அளவெட்டி அருணோதயாக் கல்லூரி
3. பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி

**19 வயது கீழ்- ஆண்கள்**

1. பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி
2.யாழ். இந்து கல்லூரி
3. சாவகச்சேரி இந்து கல்லூரி

**19 வயதின் கீழ் பெண்கள்**

1.யாழ்.இந்துமகளிர் கல்லூரி
2. வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி
3. அளவெட்டி அருணோதயா கல்லூரி(ஸ்ரீ)

# இலங்கை கடற்பரப்பில் பாரிய அழிவை எதிர்நோக்கியுள்ள கடற்பன்றிகள்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பிலிருந்து 'டுகோன்' என்ற கடற்பன்றி இனம் தற்போது அழிவை சந்தித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

முறையற்ற மீன்பிடி காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக கடல் ஜீவராசிகள் திணைக்களம் தெரிவிக்கின்றது.

கற்பிட்டி மற்றும் மன்னார் கடற்பரப்புக்களில் டைனமற் தடை செய்யப்பட்ட வலைகளை விரித்து மீன்பிடித்தல் மற்றும் எண்ணெய் பரவல் உள்ளிட்ட காரணங்களாலேயே மேற்படி கடற்பன்றி இனம் அழிவடைந்து வருவதாக குறித்த திணைக்களம் குறிப்பிடுகின்றது.

கடற்தா வரங்களை மாத்திரமே உட் கொண்டு வாழும் கடற்பன்றி இனத்தின் ஆயுட்காலம் 70 ஆண்டுகளாகும்.

சுவாசிப்பதற்காக இரண்டு அல்லது மூன்று தடவைகள் நீருக்கு வெளியே வருவதே இந்த கடற்பன்றி இனத்தின் அழிவுக்கு காரணமாக அமைந்துள்ளது என்று மேற்படி கடல் ஜீவராசிகள் திணைக்களம் மேலும் குறிப்பிடுகின்றது. (ஸ்ரீ-2)


## 31 ஆம் நாள் நினைவு தினம்

### சிதம்பரப்பிள்ளை சேனாதிராசா

(மாசார், பளை)

மடியில் 1937 . 07 . 17

மண்ணில் 2011 . 04 . 30



அணைகடந்த அன்பு மழையில்
எமை வளர்த்தெடுத்த தெய்வமே
அரவம் தீண்டிய நொடியிலேயே
அணைந்ததேனோ – தந்தையே
ஆறாத மனதுடனே புலம்புகின்றோம்
உளம் வெந்தே கொதிக்குதையா
உதவியின்றித் தவிக்கையிலே
உம் நினைவு வாட்டுதையா ஓடோடி வருவீர்களா?

இன்று 30/05/2011 எம் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


தகவல் :-
குடும்பத்தினர்

எஸ்.கிருஷ்ணகுமாரி(மகள்),
ஆசிரியர்.

(5039)

# திரோட் இரட்டைச் சதம்; குக் சதம்

# இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் முன்னிலை



(கார்டிவ்)

திரோட் இரட்டைச் சதமடித்து அசத்த, இங்கிலாந்து அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 491 ஓட்டங்களை எடுத்து 91 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 26ஆம் திகதி கார்டிவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 400 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரசன்ன ஜெயவர்த்தனா 168 பந்துகளில் (12 பவுண்டரிகள் உட்பட) 112 ஓட்டங்களையும் பரணவித்தான 66, சமரவீர 58, அணித்தலைவர் டில்சான் 50 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அன்டர்சன், சுவான் தலா 3 விக்கெட்டுக்களையும் பிரோட் 2 விக்கெட்டுக்களையும் திரிம்லெட் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி திரோட்டின் இரட்டைச் சதத்தின் மூலம் நேற்றைய நான்காம் நாள் ஆட்ட நேரமுடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களையிழந்து 491 ஓட்டங்களை எடுத்தது.

இதில் திரோட் 409 பந்துகளில் (17 பவுண்டரிகள் உட்பட) 203 ஓட்டங்களையும் குக் 274 பந்துகளில் (10 பவுண்டரிகள் உட்பட) 133 ஓட்டங்களையும் இயன் பெல் ஆட்டமிழக்காமல் 98 ஓட்டங்களையும் மோர்கன் ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் லக்மல், டில்சான், மகரூப், மெண்டிஸ், ஹேரத் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

இப்போட்டியின் ஐந்தாவதும் இறுதி நாளான ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 91 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

இதேவேளை இப்போட்டி மழை காரணமாக 89 ஓவர்கள் வரை வீசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணத் தொடரில்

# ஊக்க மருந்து சோதனையில்

# இலங்கை வீரர் தரங்க தோல்வி



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது மேற்கொள்ளப்பட்ட தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துச் சோதனையில் இலங்கை வீரர் உபுல் தரங்க தோல்வியுற்றமை குறித்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) விசாரணை நடத்தவுள்ளதாக சண்டே ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இடது கை வீரரான உபுல் தரங்க அண்மைக் காலங்களில் சிறப்பாக விளையாடியவர். ஆனால் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது Prednisolone எனும் தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்து தரங்கவிடமிருந்து பெறப்பட்ட சிறுநீர் மாதிரிகளில் காணப்பட்டுள்ளது.

வி.வி.ஐ.பி. ஒருவரின் மாற்று மருத்துவத் துறை மருத்துவர் ஒருவர் சிபாரிசினால் இம் மருந்தினை அவர் பயன்படுத்தியிருப்பது தெரியவந்திருப்பதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

இங்கிலாந்துடனான அரையிறுதிப் போட்டியின்போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய தரங்க ஆட்டமிழக்காமல் சதமொன்றை குவித்தார். அப்போட்டியில் இலங்கை 10 விக்கெட்டுக்களால் வென்றமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாற்று மருத்துவரை குறித்த வி.வி.ஐ.பி. பல விளையாட்டு வீரர்களுக்கு சிபாரிசு செய்துள்ளார். சச்சின் டெண்டுல்கர், கௌதம் காம்பீர், ஆஷிஸ் நெகரா உட்பட பல விளையாட்டு நட்சத்திரங்கள் கொழும்புக்கு வந்து இம்மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுள்ளனர். இலங்கையின் தேசிய கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ஏனைய விளையாட்டு நட்சத்திரங்கள் பலரும் அண்மைக்காலத்தில் மேற்படி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதாகவும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் செயலாளர் நிசாந்த ரணதுங்க இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், இத்தகைய சம்பவம் குறித்து உத்தியோகபூர்வமாக எமக்கு எதுவும் தெரியாது எனக் கூறியுள்ளார். பயன்படுத்தியமை குறித்து எந்தவொரு நிறுவனத்திடமிருந்தோ முகவரிடமிருந்தோ அறிக்கை எதுவும் கிடைக்கப்பெறவில்லை என அவர் கூறியுள்ளார்.

எனினும் ஐ.சி.சி. விசாரணையை எதிர்கொள்வதற்கு தரங்கவின் சட்டத்தரணிகள் தயாராகி வருவதாக சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது. ஐ.சி.சி. பேச்சாளர் ஜேம்ஸ் பிட்ஸ்ஜெரால்ட் இது குறித்து கருத்து கூறுவதற்கு மறுத்துள்ளார்.

# நாம் கட்டி எழுப்பும் சமா...

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார கடன் வழங்கல், நஷ்டஈடு வழங்கும் நிகழ்வு நேற்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் சந்திரசிறி கஜிதீர மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தனது உரையில்,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கும் நிகழ்வு இன்று (நேற்று) நடைபெறுகின்றது. அதாவது, இந்நிகழ்வை இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டு ஒழுங்கமைத்துள்ளோம்.

முதலாவதாக யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அல்லது காயமடைந்தவர்களுக்கு மற்றும் சொத்துக்களையிழந்தவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்குகின்றோம்.

மற்றையது யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகர் பிரிவு அல்லது உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு கடன் உதவி வழங்குதல்.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள், அதேபோன்று அழிவடைந்த சொத்துக்கள், உடைமைகளை மிக வேகமாக மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கை எமது அரசாங்கத்திற்கு முதல் தர கடமையாகவுள்ளது.

இந்த மாவட்டத்தில் குடிநீர்ப்பிரச்சினையை சீர்செய்வதற்காக எமது அரசாங்கம் மூன்று ஆண்டு திட்டமாக 20 ஆயிரத்து 250 மில்லியன் ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்துடன் குடிநீர் வழங்கலை முன்னெடுப்பதற்காக இன்றைய தினம் (நேற்று) மேலும் 13 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை இந்த இடத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று வீதி அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. யார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் கூட இந்த மாவட்டத்தில் மீள்குடியேற்றம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுவருகிறது. கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகள் தவிர்ந்த மற்றைய எல்லா இடங்களிலும் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆகவே யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்தப் பகுதியில் அபிவிருத்திப் பணிகளை துரிதமாக முன்னெடுத்துள்ளோம் என்பதை இந் நடவடிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.

அதேபோன்று முன்னாள் போராளிகளாக இருந்த பல்லாயிரக்கணக்கான இளைஞர் யுவதிகள் எங்களிடம் சரணடைந்தார்கள். அவர்களில் அதிகளவானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்து விட்டோம் அல்லது பெற்றோரிடம் இணைத்து விட்டோம். அத்துடன் எதிர்வரும் 5ஆம் திகதி 900 பேரை விடுதலை செய்யவுள்ளோம்.

இவ்வாறு சரணடைந்து புனர்வாழ்வு நிலையங்களிலேயே இந்த இளைஞர் யுவதிகளின் பராமரிப்புக்காக மாதம் 100 மில்லியன் ரூபாய் நிதியை செலவு செய்கின்றோம்.

மேலும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு நாம் நேரில் சென்று அந்த இளைஞர் யுவதிகளின் குறைநிறைகளை அறிந்து உதவி செய்து வருகிறோம். எனவே அவர்களுக்கு சிறந்த வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்துள்ளது.

வவுனியாவிலுள்ள ஒரு முகாமிற்கு சென்றேன். அங்கிருக்கின்ற 82 யுவதிகள் தையல் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைந்தேன்.

அப்போது தெரிந்தோ தெரியாமலோ கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளை மீண்டும் செய்வதற்கு நாம் நினைத்துக் கூட பார்க்க மாட்டோம் என அந்த யுவதிகள் என்னிடம் தெரிவித்தார்கள்.

கடந்தகால யுத்தத்தின் பின்னர் வடக்கு மாகாணத்தில் 14.5 சதவீத தேசிய வருமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பொருளாதார வளர்ச்சி என்பது மிகவும் நேர்த்தியாக முன்னேறியுள்ளது.

ஆகவே பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்றபோது-பொருளாதார ரீதியில் மக்களை நல்ல நிலைக்கு கொண்டுவருகின்ற போது சமூகத்தில் இருக்கக் கூடிய தீயசக்திகளை வெற்றிகரமாக முறியடிக்க முடியும்.

அதேபோன்று நாங்கள் பொருளாதாரத்தை கட்டியெழுப்புகின்றபோது, அதனை சூறையாடுவதற்கும்-இல்லாமல் செய்வதற்கும் மேற்குலக நாடுகள் முயற்சி செய்துவருகின்றன.

அதுமட்டுமல்ல நாங்கள் கட்டியெழுப்புகின்ற சமாதானத்தை சீர்குலைப்பதற்கும் மக்கள் மத்தியில் பிரச்சினைகளை உருவாக்குவதற்கும் மேற்குலக நாடுகளிலுள்ள விஷமிகள் முயற்சிக்கின்றார்கள் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது.

அதேபோன்று வடக்கு-தெற்கு பேதமின்றி நாங்கள் அனைவரும் சினேகபூர்வமாக வாழ்கின்றபோது அதனைக் குழப்புவதற்கு மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் முயற்சிக்கிறார்கள் என்பதையும் நாம் கண்டுகொள்ள வேண்டும்.

அதனை நாம் முறியடிப்பதற்கு விழிப்படையவேண்டும். அதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்பதை நான் இந்த இடத்தில் ஆணித்தரமாக கூறிக்கொள்கிறேன்.

இவ்வாறு புனர்வாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜிதீர தெரிவித்தார். (ந-5)

# யாழில் அதி...

நேற்றிரவு 8.30 மணியளவில் யாழ் நகர் கஸ்தூரியார் வீதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் படுகாயமடைந்த வில்லூன்றி வீதி நாவாந்துறையைச் சேர்ந்தவர்களான ஸ்ராலின் (வயது 30), அஜித் (வயது 31) ஆகிய இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(ந-5)

# இனப்...

தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது.

விரைவில் இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் இலங்கை தொடர்பில் இந்திய மத்திய அரசாங்கத்திற்கு பல்வேறு அழுத்தங்களை வழங்கிவருகிறார்.

இதன்காரணமாக இலங்கை தொடர்பில் இந்தியா விரைவான செயற்பாடுகளை காண்பிக்க வேண்டிய நிலையில் இருப்பதனால் இலங்கை அரசாங்கத்திற்கு பாதகமான சூழ்நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளதாக லக்பிம நியூஸ் தெரிவித்துள்ளது. (ந-5)

**வீடு விற்பனைக்கு**

**கொழும்புத்துறை மேற்கில், கொழும்புத்துறை வீதி கணக்கர் சந்திக்கருகாமையில் உள்ள 3 பரப்பளவுடைய 3 கடைத் தொகுதியும் அதன் பின்னால் நல்ல நிலையிலுள்ள வீடும் விற்பனைக்குண்டு.**

(5045)

தொடர்பு: 0779239314

# கொழும்பை காப்...

குறித்து விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டால் அதனை எதிர்கொள்வது தொடர்பில் கொழும்பு இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வகையில் இந்தோனேசியாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை, குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களை, பீரிஸ் தலைமையிலான குழுவினர் சந்தித்து நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஆதரவைத்திரட்ட முயற்சித் திருந்தனர்.

வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தலைமையிலான குழுவில் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெளிவிவகார ஆலோசகர் சஜின்வாஸ் குணவர்த்தனவும் உள்ளடங்கியிருந்தனர்.

ஆனால் நிபுணர்குழுவின் அறிக்கை குறித்த கொழும்பின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக அணிசேரா நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களிடம் இருந்து உறுதியான வாக்குறுதி எதனையும் இக் குழுவினரால் பெற முடியவில்லை.

இந் நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளச் சென்றுள்ள அமைச்சர் மகிந்த சமரசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் உயர்மட்டக்குழு ஜெனீவாவில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து நிபுணர் குழு அறிக்கை தொடர்பான கொழும்பில் நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


## ஷாம்சன் இங்கிலீஷ்-3 மாத பயிற்சிநெறி

ஒரு குழந்தை தன் தாய் மொழியைப் பேசப் பழகுவதற்காக இலக்கணத்தைக் கற்றுக் கொள்வதில்லை. மாறாக தன் குடும்பத்தில் உள்ளவர்கள் பலரும் பேசும் வசனங்களை அவதானித்தே தானும் அது போலப் பேசப் பழகுகிறது. ஒரு மொழியை பேசப் பழகுவதற்கான சரியான வழி இது போன்ற பழக்கப்படுத்தலே.

எமது ஆங்கிலக் கற்பித்தல் முறையும் இது போன்றதே. இங்கு இலக்கணப் பயிற்சியோ, எழுத்துப் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி ஏனையவர்களுடன் அவர்களை உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 3 மாதத்திலேயே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகிறது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான இப் பயிற்சி நெறியில் இணைந்த அனைத்து மாணவர்களுமே தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புகிறீர்களா? பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், பணியாளர்கள், கிராம சேவகர்கள் 04.06.2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும். (C-3329)

சனி .ஞாயிறு பிரிவுகள்

பிரிவு - I 08-10 am பிரிவு - III 01-03 pm

பிரிவு - II 10-12 am பிரிவு - IV 03-05 pm

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம் ரூபா 3500.00

(ஒரு பிரிவில் 16 பேருக்கு மட்டுமே அனுமதி)

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாதுவிடின் முழுப் பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH 279,Clock Tower Road,Jaffna.Tel:077 621 4567





BIT, CIMA, ENGINEERING, WEB & MULTIMEDIA

உயர்தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர்.பல்கலைக்கழக மாணவர்கள்

உங்கள் கல்வி,விளையாட்டு சான்றிதழுக்கேற்ப ICTA, MCS நிறுவனம் வழங்கும் புலமைப்பரிசில்கள்.

பல்கலைக்கழக பட்ட மேற்படிப்புகள், சர்வதேச புலமையாளர் நிறுவன தகமைகள் (BCS, Oracle,IEEE)

MCS Supported By UNDP/JRRP

SMS your name & course to 772 395 895 & Get Schol.

Free: Toefl/IELTS, CCNA,ICDL,

324,Palaly Road,Parameswara Junction

www.mcsitcampus.org


# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை...

பின்னர் கொழும்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.

அது சீனாவுடன் சேர்ந்து அமைச்சர் பீரிஸ் கூட்டறிக்கையொன்றை வெளியிட முடியாமல் போனதை வெளிப்படுத்தியது. அப்படியான கூட்டறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தால் அது மிகவும் கனதியாக இருந்திருக்கும்.

புதுடில்லியில் அமைச்சர் பீரிஸ் ஐ.நாவின் அறிக்கை தொடர்பாக கலந்துரையாடியிருந்த போதிலும் இந்தியாவுடனான கூட்டறிக்கையில் அதுபற்றி குறிப்பிடப்படவே இல்லை.

பீஜிங்கில் ஐ.நா. அறிக்கைபற்றி கலந்துரையாடப்பட்டிருந்த போதும் அதற்கு விரோதமான கருத்தை சீனா வெளியிடவில்லை.

மிகவும் முக்கியமான இந்த விவகாரத்தில் சீனாவிடம் இருந்து உறுதியானதொரு வாக்குறுதியை பீரிஸ் பெறமுடியாமல் போயுள்ளமை அரசாங்கத்தை கவலையடையச் செய்துள்ளது.

சீனாவின் சின்குவா செய்திநிறுவனம் இந்தப் பேச்சுக்கள் குறித்து வெளியிட்ட அறிக்கை, அமைச்சர் பீரிஸ் வெளியிட்ட அறிக்கையை விட சற்று வேறுபாடானதாகவே இருந்தது.

பேச்சுக்கள் தொடர்பாக சீன வெளிவிவகார அமைச்சு அறிக்கை எதையும் வெளியிடாத சந்தர்ப்பங்களில், சிக்குவா செய்தி நிறுவனம் வெளியிடும் செய்தியையே அரசியல் மற்றும் இராஜதந்திர ஆய்வாளர்கள் சீனாவின் அதிகாரபூர்வ கருத்தாக எடுத்துக் கொள்கின்றன.

அமைச்சர் பீரிஸின் சந்திப்பிக்குப் பின்னர் சின்குவா வெளியிட்ட செய்தியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கூட ஐ.நாவின் அறிக்கைபற்றி குறிப்பிடப்படவில்லை.

இந்த அறிக்கையை நிராகரித்துள்ள இலங்கை அரசுக்கு ஆதரவளிப்பதாகவும் கூட அதில் கூறப்படவில்லை.

பீரிஸ் கூறியது போல இந்த அறிக்கை பற்றி கலந்துரையாடப்பட்டிருந்தால் சீனா எதற்காக இந்த விவகாரம் பற்றி தொடர்ந்தும் மௌனமாக இருக்கிறதென்பது மர்மமாக வுள்ளது என்றும் கொழும்பு ஆங்கிலவார இதழ் கருத்து வெளியிட்டுள்ளது. (ந-5)


## குமரகுரு வாணிபம்

### வைகாசித் திருவிழா மலிவு விற்பனை

அன்பிற்கினிய எமது வாடிக்கையாளர்கட்கு,
எதிர்வரும் 30.05.2011 தொடக்கம் 30.06.2011 வரை விசேட சிறப்புக் கழிவு விற்பனையாக ரெடிமேட் ஆடைகளுக்கு இரண்டுக்கு ஒன்று இலவசமாக வழங்கவுள்ளோம். அத்துடன் ஏனைய பொருட்கள் (10,000) பத்தாயிரம் பெறுமதியான கொள்வனவுக்கு உங்கள் அதிர்ஷ்டப் பெட்டியில் இருந்து உங்களால் தெரிவுசெய்யப்படும் பரிசுப் பொருட்கள் உடனுக்குடன் வழங்கவுள்ளோம் என்பதனையும் சித்திரைப் புதுவருடப் பிறப்பிற்கு அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் 20.06.2011 அன்று பிற்பகல் 4.00 மணிக்கு குமரகுரு மல்ரிசொப் முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு மோட்டார் சைக்கிள்கள் வழங்கவுள்ளோம் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

இச் செய்தியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவீர்கள் என்றும் நம்புகின்றோம்.

இப்படிக்கு உங்கள் ஆதரவின் கீழ்

குமரகுரு மல்ரிசொப்.
பிரதான வைத்தியசாலை முன்பாக,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

குமரகுரு புடைவையகம்,
A-9 வீதி, கச்சேரி முன்பாக,
கிளிநொச்சி.

விரைவான சேவைக்கு குமரகுரு (சி-3296)


## மரண அறிவித்தல்

### சுப்பையா மாரிமுத்து

39, சுவாமியார் வீதி, கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும் குருணாகலையை வதிவிடமாகவும் கொண்ட சு.மாரிமுத்து 28.05.2011 அன்று இறைபாதம் சென்றடைந்தார்.

அன்னார் அமரர்களான சுப்பையா, கமலாம்பாள் ஆகியோரின் அன்பு புதல்வரும் சிங்காரவேல், அமரர் கோமளாம்பிகை ஆகியோரின் அன்பு மருமகனும் வளர்மதியின் பாசமிகு அன்புக் கணவரும் செல்வி லோகபிரகாசினியின் (Royal சர்வதேச பாடசாலை, குருணாகலை-தரம் 10 B) அன்பு தந்தையும் ஆவார்.

மேலும் அன்னார் அமரர்களான பொ.இராமநாதன் பிரஜாபதியின் பெறாமகனும் ராஜேஸ்வரி, சிவயோகநாதன், சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு சகோதரனும், கண்ணன் ஐயா, வசந்தி, தெய்வநாயகி, நவயோகன் ஆகியோரின் மைத்துனனும், அமரர் து.வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்), து.மகாதேவன்(ஓய்வுபெற்ற பொது சுகாதார பரிசோதகர்), திரு.திருமதி குகமூர்த்தி, து.சிவபாலன், து.சுரேந்திரன் (யாழ்.மாவட்ட நீதிமன்ற பதிவாளர்), து.விவேகானந்தக் குருக்கள் (வண்.கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள்) ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.05.2011 (திங்கட்கிழமை) நண்பகல் 12.00 மணியளவில் 12, சீனியர் லேன் கலட்டியில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மகள், உறவினர்
வி.பிரணவன்

(C-3331)


## Hindustan College of Arts & Science, Chennai.

Affiliated to University of Madras.

பெறுமதியான, உங்களுக்கு பிடித்தமான துறையை தெரிவு செய்யுங்கள்..
வேலை வாய்ப்புக்களில் முன்னுரிமை பெற்றிடுங்கள்..

July 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்

எம்மால் அனுமதி வழங்கப்படும் பாடத்துறைகளில் சில....

- B.Sc. Microbiology
- B.Sc. Biotechnology
- B.Sc. Visual Communication
- B.Sc. Electronic Media
- B.Sc. Mathematics
- B.Sc. Computer Science
- B.Sc. Electronics & Communication Science
- B.Sc. Information Systems Management
- B.C.A. (Day / Evening)
- B.Com. (Bank Management)
- B.Com. (Corporate Secretaryship)
- B.Com. (Day / Evening )
- B.B.A. மற்றும் பல...

**Postgraduate Programs**

- M.Sc. Computer Science
- M.Sc. Applied Microbiology
- M.Sc. Information Technology
- M.Sc. Biotechnology
- M.Sc. Bioinformatics
- Master of Social Work

- அனுமதிக்கு A/L 3 Pass போதுமானது.
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் அதிகளவில் தேவையுள்ள தொழிற் கல்வியினை சர்வதேச தரத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.
- மிகக் குறைந்த கட்டணத்தில் தரமான கல்வி
- UK, Canada போன்ற நாடுகளில் மேற்படிப்பினை அல்லது இறுதி ஆண்டினை தொடர்வதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

V4 Educational Consultancy(Pvt)Ltd
catalyst for your higher studies

Head Office- No: 64, Kanagaratnam Road, Ariyalai, Jaffna.
Branch- No: 23, Modern Market, Valvettithurai, Jaffna.

Tp: 0773 867 257

web: www.v4edu.com E-mail: mail@v4edu.com


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.